25/11/51 M.V.M M BANGALORE 2


# போர்வாள்

வாள் 5 வீச்சு 12

24-11-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

ஈர. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை 2 அணா


# திராவிடநாடு பிரிவினைக்கு ஆதரவு தந்தால் தேர்தலில் நாம் ஒத்துழைப்போம்

## மதுரையில் கூடிய தி. மு. க. பொதுக்குழு முடிவு

நடைபெற இருக்கும் பொதுத்தேர்தலில் தி. மு. க. அபேட்சகர்களை நிறுத்துவதில்லை என்றும்,

திராவிடநாடு பிரிவினைப் பிரச்சினைக்கு ஆதரவு தருவதாக உறுதி கூறும் கம்யூனிஸ்ட் அபேட்சர்களுக்கும், காங்கிரஸ் அல்லாத முற்போக்கு அபேட்சகர்களுக்கும் மட்டும் தன் முழு ஒத்துழைப்பையும் தருவது என்றும் மதுரையில் கூடிய தி. மு. க. பொதுக்குழு தேர்தல் பற்றிய தனது தீர்ப்பைத் தந்திருக்கிறது.

பொதுக்குழுவின் முடிவை அறிவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கொண்டிருந்த ஆர்வத்தைவிட பிற கட்சியினர்களும், பொது மக்களும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதை ஏராளமான பொதுமக்களும் மாணவர்களும் காலை முதல் இரவு நெடுநேரம் வரை பொதுக்குழு நடைபெற்ற மாளிகையைச் சூழ்ந்து கொண்டிருந்தது நன்கு எடுத்துக் காட்டியது.

மதுரை நகர எல்லையைத் தாண்டி விரகனூர் என்ற இடத்தில் பெரியதொரு தோட்டத்தின் இடையில் அமைந்திருந்த அழகிய மாளிகை ஒன்றில் இம்மாதம் 17உ சனிக்கிழமை காலை 11-மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு கூடியது. எல்லா மாவட்டங்களிலிருந்தும் 84 பொதுக்குழு உறுப்பினர்கள் வந்துகூடியிருந்தார்கள். பொதுக்குழு உறுப்பினரல்லாதவர்கள் பலர் வெளி மாவட்டங்களிலிருந்து கூட்டத்தின் முடிவை அறியும் ஆவலுடன் பார்வையாளர்களாக வந்திருந்தார்கள். கூட்டம் காலை 11-மணிக்குத் துவங்கி மறுநாள் விடியற்காலை 5-மணிவரை தொடர்ந்து நடைபெற்றது. இடையில் பகல் உணவுக்கு 45-நிமிடமும், இரவு உணவுக்கு 45-நிமிடமும் கழிந்தது தவிர மற்ற நேர முழுதும் கழக சட்டதிட்டங்களையும், இதர பிரச்சினைகளையும் ஆய்ந்து விவாதிப்பதில் செலவழிக்கப்பட்டிருப்பதும், ஒவ்வொரு உறுப்பினரும் தெளிவாகவும் நுணுக்கமாகவும் கருத்துக்களை வெளியிட்டதும் இயக்க சரித்திரத்திலேயே கண்டிராத ஒரு காட்சியாக இருந்தது.

கூட்டத்திற்குப் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கி கூட்டம் கூட்டப்பட்டதின் நோக்கத்தை விளக்கிகூறி விவாதங்களில் எல்லோரும் தாராளமாகக் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை வெளியிடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள்.

முன்னதாகவே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த அச்சிட்ட சட்டதிட்ட நகலில் தம் தம் குறிப்புக்களையும் திருத்தங்களையும்

எழுதி எல்லா உறுப்பினர்களும் கையில் வைத்திருந்தார்கள்.

சட்டதிட்டக்குழு செயலாளர் தோழர் கே. ஏ. மதியழகன், அவர்கள் சட்டதிட்ட நகல்பற்றி எடுத்துக்கூறி ஒவ்வொரு பிரிவாக ஆலோசனை செய்து தீர்மானிக்க வேண்டுமெனத் தெரிவித்து படிக்கத் தொடங்கினார்.

ஒவ்வொரு பிரிவும் நன்கு விவாதிக்கப்பட்டுமுடிவுசெய்யப்பட்டது. விவாதங்கள் கண்ணியம் செறிந்த உயர்ந்த முறையில் நடைபெற்றது. சட்டதிட்டம் முழுதும் ஆய்ந்து முடிவு செய்யப்பட்டபின் வரப்போகும் பொதுத்தேர்தல்பற்றிய கருத்துக்களை ஒவ்வொரு உறுப்பினரும் விளக்கிக்கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கம்யூனிஸ்டு தோழர்களுக்கும் தனக்கும் நடந்த பேச்சுவார்த்தைகளை பொதுச் செயலாளர் எடுத்துக் கூறினார்கள்.

தேர்தல்பற்றிய விவாதத்தில் மொத்தம் 45-உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்கள் மாவட்டங்களின் அனுபவங்களைக் கொண்டு நாம் தேர்தலில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கினார்கள். அவ்வாறு விளக்கியபோது கம்யூனிஸ்டுகள் தங்கள் ஊர்களில் அண்மையில் நடத்திய கூட்டங்களில் நம் கழகத்தைப்பற்றி வெளியிட்ட கருத்துக்களைத் தெரிவித்தது மிகவும் ருசிகரமாக இருந்தது.

இரவு 9½ மணிக்குத் துவங்கிய விவாதம் 11 மணிவரை நடைபெற்றபின் உணவுக்காக 45 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் கூடி 3 மணி நேரம் விவாதித்தபின் தேர்தல் பற்றிய தீர்மானம் உருவாக்கப்பட்டது.

தேர்தல் விவாதத்தில் கலந்துகொண்ட 45 உறுப்பினர்களில் 4 பேர்கள் காங்கிரசை ஒழிக்க கம்யூனிஸ்ட்டுகளை ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். பெரும்பாலோர் கொள்கையை விட்டுக்கொடுத்து ஆதரிக்கக் கூடாது என்றும், ஒரு நிபந்தனையின் மீதுதான் எவரையும் ஆதரிக்க வேண்டுமென்றும் தெரிவித்தனர். 3 உறுப்பினர்கள் தேர்தலை அடியோடு பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், ஒருவர் சென்னை சட்டசபையை பகிஷ்கரித்துவிட்டு இந்திய மக்கள் சபைக்கு மட்டும் நிபந்தனைகளை ஏற்கும் அபேட்சகர்களை ஆதரிக்கலாமென்றும் தெரிவித்தார். மொத்தத்தில் காங்கிரஸ்கட்சியினரை ஆதரிக்கக்கூடாதென்ற கருத்தை ஒவ்வொருவரும் எடுத்துக் கூறினர். விவாதம் மிக்க விறுவிறுப்பாக இருந்ததாயினும் கட்டுப்பாடும் கண்ணியமும் குறையவில்லை. நீண்டநேர விவாதத்தின் பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(1) திராவிடர்களின் கருத்தை அறியாமலும், திராவிடரின் ஜீவாதார உரிமைக்கு ஊறு செய்யும் முறையிலும், ஒரே கட்சியாரின் எதேச்சாதிகார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பதன் அறிகுறியாக அந்தச் சட்டத்தின்படி நடைபெறும் **முதல் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் அபேட்சகர்களை நிறுத்திக் கலந்து கொள்வதில்லை** என்று இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

(2) திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு கோரியும், ஒத்துழைப்பை நாடியும், கூட்டு முன்னணி அமைக்கும் நோக்குடனும் அணுகிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களுடன் பொதுச் செயலாளர் நடத்திய பேச்சுவார்த்தைகளையும், கூட்டு முன்னணிக்காகக் கேட்ட நிபந்தனைகளையும் பொதுச்செயலாளர் விளக்கிக் கூறியதைக் கேட்டு பொதுச் செயலாளரின் கருத்தை இப்பொதுக்குழு அங்கீகரிக்கின்றது.

(3) திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தலில், கம்யூனிஸ்டுகளையும், காங்கிரஸ் அல்லாத நாணயமுள்ள திறமைசாலிகளான முற்போக்குக் கருத்தினரையும் ஆதரிப்பது என்றும், இந்த ஆதரவு கோரி தலைமை நிலையத்துக்கு அபேட்சகர்கள் மனுக்களை அனுப்பி தலைமை நிலையம் குறிப்பிடும் ஒப்பந்தத்தில் (Pledge) கையொப்பமிட்டு பொதுச்செயலாளரால் அங்கீகரிக்கப்படும் அபேட்சகர்களை ஆதரிப்பது என்றும் இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

(நம் கழக மூலாதாரக் கொள்கையை அடிப்படையாக வைத்து ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்கிறது)

(அ) அப்படி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு தி. மு. க. வின் ஆதரவுபெறும் அபேட்சகர்களின் பட்டியலை மாநில மாநாட்டில் பொதுச் செயலாளர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

(ஆ) அதுவரையில் தி. மு. க. தோழர்கள் எந்தக் கட்சிக்கோ, தனி நபர்களுக்கோ பிரசாரம் செய்யவும் பணியாற்றவும் கூடாதென்றும் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

தேர்தல் பற்றிய இந்தத் தீர்மானங்கள் நிறைவேறியபின் மாநில மாநாடு பற்றி ஆலோசிக்கப் பட்டு பல முடிவுகள் செய்யப்பட்டன.

பிறகு, அண்ணா அவர்கள் பொதுக் குழுவில் கலந்துகொண்டு சிறந்த முறையில் விவாதங்களை நடத்தி நல்ல முடிவுகளைச் செய்த உறுப்பினர்களுக்கும், பொதுக்குழுவை நடத்துவதற்கு ஏற்பாடுகளையும் வசதிகளையும் செய்து தந்த அழகாடி முத்து, ஆவுடையப்பன், அய்யாச்சாமி ஆகியோருக்கும் நன்றிகூறியபின் விடியற்காலை 5-மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

---

### தி. மு. க.

# மாநில மாநாடு

★

## தொண்டர் படை அமைப்பு

★

டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற இருக்கும் தி.மு.க. மாநில மாநாட்டில், தொண்டர்களாக இருந்து பணியாற்ற விரும்பும் சென்னை தோழர்களும் கடிதம் எழுதியிருக்கும் சென்னை தோழர்களும் 25-11-51 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை ராயபுரம் பிரைட்டன் டாகீஸ் எதிரிலுள்ள நெ. 24 கழக கட்டிடத்திற்கு வந்து பதிவு செய்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

K M. கண்ணபிரான்

**மாநில மாநாடு தொண்டர் படைத் தலைவர்.**

# தெளிவில்லாத நெஞ்சம்!

[ஏர்வாடி. ஆ. மீ. அலிசேக் மன்சூர்]

மருதநாயகத்துக்கு வ. உ. சிதம்பரம் பிள்ளையென்றால் உயிர். சிதம்பரம் பிள்ளையின் அரசியல் ஞானங்களைப் பற்றி யாராவது பேச ஆரம்பித்தால் ஆவலோடு நின்று கேட்பார். சிதம்பரம் பிள்ளையைப் பற்றிய பொதுக் கூட்டம்—அதில்—மரத் தமிழர் ம. பொ. சி. பேசுகிறார் என்றால் கேட்கவேண்டுமா?

கூட்டத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்புகிறார் தோழர் மருதநாயகம். மகிழ்ச்சிக் குறி தாண்டவமாட வேண்டிய அவரது முகத்திலே ஏமாற்ற ரேகைகள்! கூட்டத்துக்குப் போகாத அவரது தோழர் ரங்கநாதன் எதிரே வருகிறார்.

"யாரு மருதநாயகமா? கூட்டத்துக்கு போயிட்டு வர்றீங்களா?"

"ஆமாம்! அந்தக் கூத்தை ஏன் கேக்கறீங்க? கூட்டமா அது?"

"என்ன அப்படிச் சொல்லிட்டீங்க. சிதம்பரம் புள்ளையைப் பற்றி ஏதாவது புதிய குறிப்புகள்......?"

"பழைய குறிப்புகள் கூட கிடையாது. பேசவா செய்தாரு?......ம்......திட்டுனாரு."

"புரியும்படிச் சொல்லுங்களேன்"

"உங்களுக்குத்தான் தெரியுமே சார். வ.உ.சியினது கூட்டம்னு போட்டதை விட, திராவிட இயக்க எதிர்ப்புக் கூட்டம்னு போட்டா பொருந்தும்."

"ம. பொ. சி. என்னதான் பேசினாரு?"

"என்னத்தைப் பேசுவாரு. அண்ணாத்துரை ஏன் கதை வசனம் எழுதுறாரு? "திராவிட நாடு" அரசியல் பொருளாதார ஞானத்துக்குப் பொருந்தாது........"

"போதும் மிஸ்டர் மருதநாயகம். இப்படியெல்லாம் பேசுவாருன்னு தெரிஞ்சதான் நான் கூட்டத்துக்கு வரவே இல்லை, தெரியுமா?"

"எல்லாம் சொல் வியாபாரம்ண்ணுறு சார்."

மருதநாயகத்துக்கும், ரெங்கநாதனுக்கும் நடந்த உரையாடல் கற்பனையல்ல. நாட்டிலே நமக்குத் தெரிந்தும், தெரியாமலும் நடைபெறும் சர்வசாதாரணமான உரையாடல்தான். அரசியல் அனாதையாகிவிட்டார். என்ன செய்வார் ம. பொ. சி? வ. உ. சி. கூட்டமா? அதில் வ. உ. சியைப் பற்றிப் பேச மாட்டார். அண்ணாதுரையைப் பற்றி ஆராய்ச்சி செய்வார்.

கட்டப் பொம்முவின் நினைவு நாளா? கப்பம் கட்டமாட்டேன் என்று போர்ப் பிரகடனம் செய்து, வேற்று நாட்டு வெள்ளைக்காரனின் முதுகெலும்பை அசைத்த கட்ட பொம்முவின் பரம்பரையினரா நாம்" என்று கேட்கமாட்டார் அந்தக் கூட்டத்தில். பின்? அண்ணாத்துரைக்கு "அறிஞன்" என்று யார் பட்டம் கொடுத்தார்கள் என்று கேட்பார்? கூட்டத்தில் எத்தனையோ மருதநாயகங்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் நமக்குத் தெரியும் கிராமணியார் என்னதான் பேசுவார் என்பது.

ஒரு அரசியல் பேச்சாளன் எத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசவேண்டுமென்ற வரம்பு—முறை—பேச்சின் எல்லை—இவைகளையெல்லாம் கடந்து பேசுகிறார் என்பதெல்லாம் நாம் அறிந்தது தான். ஆளும் பீடத்திலே தனக்கு ஒரு சிறு மூலை கூட கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தின் பிரதிபலிப்பு! விருது நகராரின் கடைக்கண் வீச்சு தன் மீது படவில்லையே என்ற ஏமாற்றத்தின் எதிரொலி.

இன்றைய ஆளும் பீடம் ஏழைகளின்—பாட்டாளிகளின் — நெசவாளர்களின் கண்ணீர்க்கோட்டை என்பதை மறந்த அவர்,—நான்கு ஆண்டுகளில் காந்திமகானின் சீட கோடிகள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் செய்த கொடுமைகளை மறந்த அவர்,—சேலம் சிறையிலே வெடித்த துப்பாக்கிச் சத்தத்தையும், அடுத்த கணம் சட சடவெனச் சரிந்த இளஞ் சிங்கங்களின் பிணங்களையும், அதற்கடுத்த கணமே 'மஞ்சள்பெட்டியின் மகத்துவமா இது' என்று சொல்லிக் கொண்டே அறுபட்ட தாலிக்கயிறுகளையும் மறந்த அவர்-வற்றாத ஆறுகள்; வளமுள்ள சோலைகள்; உயர்ந்தோங்கிய குன்றுகள்; உள்ளத்தைப் பொன்மயமாகும் தங்கச் சுரங்கங்கள்; இவைகள் நிறைந்த செந்தமிழ் நாட்டிலே குழந்தைகளை விற்றல், கொல்லல் ஆகிய கொடுமைகள் ஏன் நடக்கின்றன என்ற கேள்வியைக் கேட்க மறந்த அவர்—அரிசிதரமாட்டீர்களா என்று கேட்ட மக்களுக்கு, அபாய அறிவிப்பைத் துப்பாக்கிக் குண்டுகளின் மூலம் முழக்கிய கூட்சிஹாரை மறந்த அவர்—தென்னாட்டின் பொன்னேடாம் எந்தமிழைக் காப்பாற்றுவான் வேண்டி, இந்தியை எதிர்த்துப் போராடி, ஆளும் வட்டாரத்தின் அடக்குமுறை அம்புகளுக்குப்பலியாகி, சிறையிலே தள்ளப்பட்டு, அங்கே எலும்புந் தோலுமாகக் காட்சியளிப்பவன் ஒருவன் உண்டுபோயானால் அவன் முதன் முதலில் சிவஞானக் கிராமணியாகத்தானிருக்கும் என்று தமிழ் முழக்கம் செய்ததை எல்லாம் மறந்த அவர்— அந்த ம. பொ. சி— திராவிடம் ஏன் பிரியவேண்டுமென்பதற்காக நாம் கொடுக்கும் புள்ளி விபரங்களையெல்லாம் மறந்து போனதில் ஆச்சரியமில்லைதான்.

தென்னாட்டை விஞ்ஞானத்தின் தாயகமாக மாற்ற முடியும்; தென்னாட்டைத் தொழில் மண்டபமாக்க முடியும்; இன்பக் காற்று வீசும் செல்வமலர்ச் சோலையாக்க முடியும்; அதற்கான அறிகுறிகள் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் ஆளும் வட்டாரம் சென்னையிலா இருக்கிறது?

"நிலக்கரி தாராளமாகக் கிடைக்குமாயின் நம் மாகாணத்தில் பல வகைத் தொழில்களும் அமோகமாக வளர்ச்சியடையக் கூடும். இதைக் கொண்டு மின்சார விசை உற்பத்தியைப் பெருவாரியாகப்

(6-ம் பக்கம் பார்க்க)

# காலக் கண்ணாடி

[ தங்கவேலர் ]

"உள்ளதை வெளிப்படையாக சித்தனைகளுக்குக் கட்டுப்படாமல், தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன் எதுகை மோனையின் அடிமையல்லன், சொல், யாப்பு, இலக்கணம் முதலியவற்றிற்கும் அவன் அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன். கருத்தின் முதல்வன். அவன் ஒரு சிருஷ்டிகர்த்தா.

கவிஞன் எந்தப் பழைய வழக்கத்திற்கும் கொத்தடிமையல்லன். பழைமைக் குட்டையில் பாசி படர்ந்த பழக்கங்களை யொழித்து, அவன் வாழ்விற்கு ஊட்டமளிக்கிறான்.

உண்மைக் கவி ஒரு தீர்க்கதரிசி, அவன் பழங்கவிகளின் எதிரொலி அல்லன். பழைய வழக்கத்தின் பின்பாட்டுக்காரன் அல்லன். கவி வெறும் சீதிப்புரோகிதன் அல்லன். கவிகள் பிறர் அறிய முடியாத ஆவேசத்தை விளக்குவோர். நிகழ் காலத்திற்படிந்த மகத்தான எதிர்காலச் சாயலின் கண்ணாடிகள்!"

.........வால்ட் விட்மன் கூறுகிறார் இதுபோல. நல்ல கவிஞர்களின் தன்மையை அறிமுகப்படுத்தி வைக்கிற முறையிலே விட்மன் விளக்கவுரை தந்திருக்கிறார். உண்மையும், ஒழுக்கமும் நின்றுலவும் கவிதை எது? அந்தக் கலைச்சுவை ததும்பும் கவிதையை வடிப்போனின் உள்ளம் எப்படிப்பட்டது?... என்ற நிலைமையை யெல்லாம் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டிய சூழ்நிலை இன்றுமட்டும் நமக்கு நேர்ந்துவிட்டதல்ல, அன்று தொட்டு...வால்ட் விட்மன் காலத்துக்கு முன்பிருந்து...உலகோர் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டிய சம்பவம்.

நாட்டுக்குத் தீது தரும் கருத்தைக் கவிதையிலே பாடிவிட்டு கவிச்சக்ரவர்த்தி" என்ற புகழ் "மொழியால் சிலபலர் அழைக்கப்படுகிற நிலை...உண்மைக் கவிதை எது? ஒழுக்கக் கவிஞன் யார்? என்பதைத் தெளிவுபடுத்தி விளக்கிக்கொள்ளாததால்தான் ஏற்படுகிறது!

இன்று இராமாயணத்தைக் கலைச் சுவை ஏடு என்றும், அதைத் தீட்டிய கம்பனைக் கவிச்சக்கரவர்த்தி என்றும் பலரல்ல—மிகமிகச் சிலர்—அழைக்கிறார்களே...., அதுவும் உண்மையைத் தெளிவு படுத்திக் கொள்ளாத காரணத்தாலேதான் அந்தப் போக்கு!

ஒரு கவிஞன் தனது தூய உள்ளத்தை உலகோர்க்குக் காட்ட வேண்டுமானால் முதலில் அவன் தன்னைக்காலத்தோடு ஒட்டிப்பார்த்துக்கொள்ளவேண்டும். காலக் கண்ணோட்டத்தைச் சந்தேகமின்றிக் காணவேண்டும்! அறிஞன், ஜே. டிவிட்டி கூறுவதுபோல, "சந்தேகிப்பவனுடைய அதிருப்தி, சந்தேகத்தைவிடப் பிரமாண்டமானது"......என்ற கருத்தைக் கொண்டு நடப்பு நிகழ்ச்சிகளின் சந்து பொந்துகளி லெல்லாம் சென்று உண்மை நிலையை சந்தேகத்துக்கு இடம் வைக்காமல் காண வேண்டும்......

கவிஞனொருவன் தன் கவிதையைத் தீட்டுவதற்கு முன்பு தன் சிந்தனையைத் தூய்மைப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு கவிதை நாட்டிலே உலவி அது சித்து விளையாடல்கள் புரிகிற நிலைமையை கவிஞன் புரிந்துவிட்டிருக்கிற காரணத்தால்...நஞ்சு கலந்த கவிதைகளின் பக்கம் அவன் சிந்தனை ஓடும்போது அந்த நிலையிலிருந்து தன் சிந்தனையை விடுவித்துக்கொள்ளவேண்டும். கண்ட கண்ட காட்சியெல்லாம் கருத்துக்கு விருந்து என எண்ணி அந்தப் படப்பிடிப்பைக் கவிதை மூலமாகக்காட்ட நினைத்தால் அதுதான் ஆபத்தான விபரீத நிலையில் போய் முடியும்!

நல்ல காட்சியை நாட்டுக்குக் காட்டவேண்டிய கவிஞனுள்ளத்திலே நஞ்சு கலந்துவிட்டால் போச்சு!..........அவன் கொண்ட கொள்கை, எடுத்த முயற்சி, தொடுத்த கவிதை அத்தனையும் வீண் விரயம். நஞ்சுக் கவிதை மலர் தொடுத்து இலக்கிய மாலை கட்டப்புகுந்தவர்கள்........தங்கள் பணியிலே வெற்றியடைந்து விட்டதாக நாம் கேள்விப்பட்டதில்லை!

கவிஞனுடைய உள்ளமும் அவன் நோக்கமும் தூயதாக இருக்க வேண்டுமென்று நாம் ஏன் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறோமென்றால், ஒரு கவிஞனைக் கொண்டுதான் அவன் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலையையும், செய்தியையும் பின் சந்ததியினர் அறிந்துகொண்டு வருகின்றனர்!

......"மனித இயற்கையை மலை போல் காத்து நிற்பவன் கவிஞன். அன்பு என்னும் ஆயுதத்தைக் கொண்டு அவன் மனித இயற்கையைக் கட்டுப்படுத்திக் காப்பாற்றுகிறான். நாடுகள் தோறும் மொழிகள் வேறு, பழக்க வழக்கங்கள் வேறு, தட்பவெட்ப நிலைமை வேறு, சட்டங்கள் வேறு. இத்தனை காலமாக எத்தனை யெத்தனையோ அழிந்திருக்கின்றன. எண்ணெண்ணமோ மாறுதல்கள் நடந்திருக்கின்றன. ஆனால் மனித வர்க்கத்தையே எந்த நாட்டிலும் எல்லாக் காலத்திலும் கவிஞன் தன் அறிவினாலும்—அன்பினாலும் ஒன்று படுத்தி இருக்கிறான்," என்று இதுபோல விலியம்வோர்ட்ஸ் வொர்த் கூறி ...கவிஞனின் அற்புத ஒற்றுமைத் தத்துவத்தை உலகறியும் நிலையை விளக்குகிறான். பெரியார் பெர்டிராண்ட் ரஸல், "அறிவுடன் அன்பும் கலந்திருக்கும் வாழ்க்கைதான் நல்ல வாழ்வு—அதுதான் புது வாழ்வு" என்று குறிப்பிட்டுக் காட்டுகிற புதுவாழ்வு நிலையை நாட்டிலே உலவவிடுவதற்கு நல்ல கவிஞன் தன் அறிவை அன்போடு கலந்து நல்ல வழியில் பணியாற்றினால்தான் முடியும்!

கவிஞனுக்கு இருக்கக் கூடிய உள்ளம் ஒரு நிகழ்ச்சியை பாகுபடுத்தி, வேறு வேறு காட்சியாகக் காணும் நிலையதாக இருக்கக் கூடாது!

"ஒரு மனிதன் ஒரு புலியைக் கொல்ல விரும்பும்போது, அதை அவன் வேட்டை விளையாட்டு என்

கிறான். ஒரு புலி மனிதனைக் கொல்ல விரும்பும்போதோ, அதை அவன் மூர்க்கவெறி என்கிறான்."

...என்று அறிஞர் பெர்னாட்ஷா ஓரிடத்திலே குறிப்பிடுகிறார்! அவர் கூறுவதுபோல மனிதன் தன் ஆவலைத் தீர்த்துக் கொள்ளும்போது வேட்டை என்று பெயர் சூட்டுகிறான். ஆனால், புலி அதன் ஆவலைத் தீர்த்துக் கொள்ளும்போது மூர்க்கவெறி என்றுபெயரிடுகிறான். புலியை மனிதன் கொல்வதும், மனிதனைப் புலி கொல்வதும் ஒரே செய்கையின்பாற்பட்டதே. ஆனால் மனிதனே இரண்டு வேறு வேறு பெயர்களைச் சூட்டுகிறான் அந்த ஒரே செய்கைக்கு! இந்தப் பிரித்து நோக்கும் நிலை சாதாரண மனித உள்ளத்திலே குடியிருக்கலாம். சமநீதிக் கொள்கை கொண்ட கவிஞனிடம் இதுபோல வேறுபாடு இருக்கக்கூடாது! அவனுள்ளம் விரிந்த மனப்பண்பு கொண்டதால் எதையும் ஒரே நோக்கோடு காணல் வேண்டும். "என்னிடம் எதை விரும்புகிறாயோ அதை எடுத்துக் கொள்........என்று சொல்வது தியாகமல்ல; தன்னைச் சகலவிதத்திலும் பிறருக்குப் பயன்படுத்துவதுதான் தியாகம்!"...

......என்று டால்ஸ்டாய் குறிப்பிடுகிற தியாகமும், பொது நோக்குக்கொண்ட கவிஞர்கள் ஒருதலைப் பட்சமாகவே இருக்கக்கூடாது.

"முற்றும் துறந்த ஞானிக்கும் நல்ல குணங்கள் படைத்தவர்களுக்கும் இந்த உலகத்தின்மீது கோபம் வரலாம். அதற்காக வருத்தமும் ஏற்படலாம். ஆனால் தன் கடமையைச் செய்து கொண்டே போவதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர் எவரும் இந்த உலகத்திடம் அதிருப்திப்படுவதே இல்லை"... என்று கதே கூறும் கடமையாளர்களாக இருக்கவேண்டும் கவிஞர்கள்! உலகத்திடம் அதிருப்திப்பட்டு அதன் நடப்புகளிலிருந்து தன் சிந்தனையைப்பெயர்த்தெடுத்துவிடக் கூடாது—அதுமாதிரி செய்வதானது உண்மைக் கவிஞனின் செயலுமாகாது! நாட்டைக் கண்டு... அங்கே குமுறுகிற எண்ண அலைகளை கவிதையிலே காட்டவேண்டும் மக்கள் கவிஞன்! ஆங்கிலக்கவி ஷெல்லி ஒருசமயம் குறிப்பிட்டான் "மக்களே! உங்களைத் தாழ்மைப் படுத்தும் தனவந்தருக்கு நீங்கள் உழுது பயிரிடுவதேன்? உங்களை உதாசினப்படுத்தும் உள்ளம் உடையவர்களுக்கு-உயர்ந்த உடைகளைக் கவலைப்பட்டு நெய்து கொடுப்பதேன்? உங்கள் வியர்வையை வடித்து உங்கள் குருதியைக் குடித்து உங்களைத் துன்புறுத்தும் அந்த நன்றியற்ற தேனீக்களுக்குப் பிறப்புமுதல் இறப்புவரை, உணவும் உடையும் தந்து காப்பது ஏன்? உங்களுக்கு உணவு, உடை, ஓய்வு, தங்க இடம், சுகம்—உண்டா? நீங்கள் விதைக்கிறீர்கள், அபலான் அறுக்கிறான்; நீங்கள் நெய்கிறீர்கள், அபலான் அனுபவிக்கிறான்; நீங்கள் ஆயுதம் செய்கிறீர்கள், அபலான் அதை உங்கள் மீதே உபயோகிக்கிறான். விதையுங்கள், ஆக்குங்கள், ஆயுதம் செய்யுங்கள், ஆனால் அவற்றை நீங்களே உபயோகப் படுத்திக்கொள்ளுங்கள்!?... என்று ஷெல்லி இதுபோலத் தனது கவிதையிலே தீட்டிக்காட்டுகிறான். அவன்தான் மக்கள் கவிஞனாக கொள்ளப்படுகிறான். நமது நாட்டு பாரதிதாசன் கொண்டிருக்கிறாரே அந்த ஆர்வ அலைபோன்றதுதான் ஷெல்லி உள்ளத்திலும் மோதிக் கொண்டிருப்பது, இவ்வாறு ஆர்வ அலை மோதும் உள்ளங்கொண்டவர்களாகத்தான் கவிஞர்கள் காட்சிதரவேண்டும்.

..."பாமர மனிதன் பாராளுங் காலமிது! பழங்காலச் சின்னங்களைப் பாரிலே அகற்றுங்கள், வயலிலே விளையும் உணவு, விவசாயிக்கு உரிமையில்லையென்றால், அவ்வயலிலே நிற்கும் அவ்வளவு கதிர் மணியையும் அழித்துப்பொசுக்குங்கள்" என்று கவி இக்பால் குரல் கொடுக்கிறார் தனது கவிதை மூலமாக. உண்மைக்கவி என்போர் இக்பால் போல, ஷெல்லிபோல, பாரதிதாசன் போலத்தான் குரல் கொடுக்கமுடியும், குரல் கொடுக்க வேண்டும்!

மக்களின் இதயத்தோடு தன் இதயத்தைப் பதித்துணர்ந்து கவிஞர்கள் கவிதை தீட்டவேண்டும். கவிதைக்கலை (Poetics) சாதாரண மக்களுக்கும் தன்னை அறிமுகப் படுத்திக்கொள்கிற முறையிலே அமையவேண்டும். ருஷ்யப் பெரியார் டால்ஸ்டாய் கூறுகிறபடி, "கலை என்பது அதனிடத்துப் பழகும் மக்களை உணர்வு வழியில் சிக்கச்செய்யவேண்டும்" என்ற குறிக்கோளின்படி கவிதைக்கலை அமையவேண்டும். கவிதைக்கலையின் ஜீவநாடிகள்தான் கவிஞர்கள். கலை பகுதியிலே பலவகையுண்டு. அவற்றிலே "நுண்கலைகள்" (The Fine Arts) பற்றி அறிஞர் சிட்னி கால்வின் என்பவர் "என்சைக்ளோபீடியாவில்" (Encyclopaedia) தனது கட்டுரையொன்றிலே, "உலகில் பிறந்த நாம் செய்தே தீரவேண்டும் என்பதற்காகச் சில காரியங்களைச் செய்கிறோம். இவை நமக்கு இன்றியமையாதவை. இன்னும் சிலவற்றை நாம் செய்யவேண்டுமென்று பிறர் எதிர்பார்க்கின்றனர். இவை கடமைகள் எனப்படும்!... அந்த வரிசையிலே இடம் பெறுவதுதான் நுண்கலைகளும்........அந்த நுண்கலைகளுக்கு தேர்ந்த கற்பனையும், உள்ளசுதந்திரமும் தேவைப்படும்!" ......என்று நுண்கலைகளின் தன்மைக்காக சிட்னிகால்வின் எடுத்துக்கூறுகிற அந்த தேர்ந்தகற்பனையும், உள்ள சுதந்திரமும் கவிதைக்கலையை உருவாக்கும் கவிஞனுக்கும் தேவைப்படுவதுதான்!

"சாதாரண அளவுக்கு மேற்பட்ட உணர்ச்சி நிலையும், சாதாரண அளவுக்கு மேற்பட்ட ஒழுங்கும் கலந்து விளைவது கவிதை" என்று கூல்ரிட்ஜ் கூறுகிற மணிவாசகத்தை மனதிலே கொண்டு கவிஞர்கள் கவிதைக் கலையை...... உருவகப்படுத்த வேண்டும்.

* * *

அழகைச் சுற்றி வட்டமிட்டு காதல் கொண்டுகிடுவது கவிஞனின் உள்ளம்.

அழகு அழிக்கப்படுவதுகலை உள்ளங்களுக்குப் பிடிக்காத செயல்.

அழகின் மதிப்பு அளவிட முடியாதது! அந்த அழகிலே சிந்தையைப் பதித்திருப்பவர்கள்தான் கவிஞர்கள். அழகு மாளிகை என்றால் அதை காத்து நிற்கும் காவல்காரர்கள கவிஞர்கள். அழகு துப்பாக்கி என்றால் அதிலிருந்து வெளியே பாய்ச்சப்படும் குண்டுகள் கவிஞர்கள். அழகு உடல்—கவிஞர்கள் அந்த உடலின் உயிர் ......என்று இதுபோல எப்படி வேண்டுமானாலும் அழகையும்—கவிஞர்களையும் உவமையிட்டுக் கூறலாம்... அந்த அளவிலே அழகின் காதலர்களாகி விட்டார்கள் கவிஞர்கள்.

(15-ம் பக்கம் பார்க்க)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருக்கலாம். ஜெர்மன் பிராந்தியத்தில் தற்போது நீராவியால் இயங்கும் ரயில்களில் பல இனி மின் விசையைக் கொண்டே இயக்கக் கூடும். எரிபொருள் தேவையான எல்லாத் தொழில்களுக்குமே நிலக்கரி பயன்படலாம். இந்தக் கரியைக் கொண்டு பெட்ரோல், செயற்கை எரு, மருந்துகள் முதலிய பொருள்களும் தயாரிக்க முடியும்.''

லண்டனிலோ, மாஸ்கோவிலோ நடத்தப்பட்ட ஆராய்ச்சியல்ல மேலே காணுவது. அல்லது 'மாலை மணி'யோ 'போர்வாளோ' தந்த தகவலுமல்ல. சுதேச மித்திரன் (நவம்பர் 2-ந் தேதி) தனது தலையங்கத்தில் இப்படி எழுதுகிறது. ஆச்சரியமாக இருக்கும். எனினும் உண்மை.

தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலிப் பகுதிக்கருகில் பூமிக்கடியில் புதையுண்டு கிடக்கும் பழுப்பு நிலக்கரியைத் தோண்டிப் பார்த்து ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்ட திட்டமான அபிப்பிராயம் பத்திரிகைகளில் வந்ததை யாவரும் படித்திருக்கலாம். அதைப் பற்றித்தான் 'சுதேச மித்திரன்' தலையங்கம் எழுதியது ''புதைந்த செல்வம்'' என்ற தலைப்பின்கீழ்! நாம் செய்யவேண்டியதை 'சுதேசமித்திரன்' செய்திருக்கிறது. அத்தோடு நின்றதா?

''இந்த வளத்தைப்பயன்படுத்திக் கொள்ள அதிகாரிகள் அப்போதே சுறுசுறுப்பான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமெனச் சொல்லத் தேவையில்லை'' என்று மறைமுகமாகத் தனது கண்டனத்தையும், வருத்தத்தையும் தெரிவிக்கிறது.

''இந்த நிலக்கரிச் சுரங்கத்தை நாம் பயன்படுத்திக் கொள்வதின் மூலம், இம்மாகாணத் தொழில்களின் தினசரித் தேவையான நூற்றுக் கணக்கான டன் நிலக்கரியை வெளியிடங்களிலிருந்து தருவிப்பதை நாம் உடனடியாகத் தவிர்க்கக் கூடும். நெய்வேலிச் சுரங்கத்தில் நிலக்கரிக்கு மேலே படிந்துள்ள தரமான களிமண்ணும், பலவகைப் பண்டங்கள் செய்வதற்கு உகந்ததென்பது குறிப்பிடத் தக்கது''

மித்திரன் தரும் தகவல் இது! திராவிட நாட்டுக் கோரிக்கை பொருளாதார ஞானத்துக்கு அப்பாற்பட்டது என்று கூறும் ம. பொ. சி. கிராமணியார் மித்திரன் தலையங்கத்தைப் படித்துத் தானிருப்பார், ஆனால் 'மறந்துவிடக் கூடாது' என்பதுதான் நமது அவா.

தென்னாற்காடு மாவட்டத்தின் நெய்வேலிப் பகுதியில் இருநூறு கோடி டன் வரை நிலக்கரி கிடைக்குமாம், நெய்வேலிப் பகுதி வருங்காலத் திராவிடத்தின் முன்னறிவிப்பு; எழுச்சி முரசு. பொருளாதாரம் புரியாத கிராமணியாரின் விசித்திர மூளைக்கு ஒரு அபாய விளக்கு.

86 லட்சம் மக்கள் கொண்ட சிலோன் ஒரு தனி நாடு. 75 லட்சம் மக்கள் கொண்ட ஸ்விட்சர்லாந்து தனி நாடு. 10 லட்சம் மக்கள் கொண்ட லக்ஸம்பர்க் ஒரு தனி நாடு. ஆனால் ஆறுகோடி மக்களுக்கு மேல் வாழும் திராவிடம்.......?

இதைப் பற்றியெல்லாம் சிந்திக்க கிராமணியாருக்கு நேரமிருக்காது. என்றாலும் பேசுவார், பாகிஸ்தான் பிரிந்த பிறகு நாம் அடைந்த கஷ்டம் போதாதா, திராவிடம் பிரிய வேண்டுமா என்று!

இதோ, வளமார் திராவிடத்தின் பொருளாதார பலத்தின் மீது தனது திருப்பார்வையைச் செலுத்தட்டும்.

கோலாரிலே தங்கம் கிடைக்கிறது.

சேலத்துக் கருகிலே ''சைன் லைட்'' என்ற அருமையானபொருள் கிடைக்கிறது.

கடலூரிலிருந்து, விருதுநகர் வரை முகப்பவுடர் செய்வதற்கு மென்மையான மண் கிடைக்கிறது. நாஞ்சில் நாட்டிலே 'யுரேனியம்' கிடைக்கிறது. நறுமணம் கமழும் அகில் கட்டைகள் நமது மலைகளில் ஏராளம்!

சேலம் மாவட்டத்திலும், பெல்லாரி மாவட்டத்தைச் சார்ந்த சாந்தூர் என்னும் இடத்திலும், வேறு பல இடங்களிலும் இரும்புக் கனிகள் இருக்கின்றன. நமது மலைகளிலே 86 சதவிகிதம் காப்பிக் கொட்டை கிடைக்கிறது.

இருபது கோடி ரூபாய்க்கு, வாசனைப்பொருள்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

'மைக்கா' என்ற தாதுப்பொருள் இங்கு ஏராளமாகக் கிடைக்கிறது. கந்தகப் பொருட்களுக்கு இங்குப் பஞ்சமில்லை,

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த திருச்செந்தூர், நான்குநேரி தாலுக்காக்களில் 90 00 000 டன்களுக்கு மேல் கண்ணாம்புக்கற்கள் உறைந்து கிடப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கடலூரிலிருந்து விருத்தாசலம் வரையிலுள்ள இடைவெளி நிலத்தில் 50 கோடி டன் அளவுக்கு மேலாக சாதாரண நிலக்கரி கிடைக்கிறது என்று அறிவிக்கப்படுகின்றது.

திருச்சியைச் சார்ந்த டால்மியாபுரம், கோவையைச் சேர்ந்த மதுக்கரை, திருநெல்வேலியைச் சேர்ந்த தாழையூத்து ஆகிய இடங்களில் சிமெண்ட் கிடைக்கிறது.

மேட்டுப்பாளையத்தில் கிடைக்கும் மண் கண்ணாடி செய்வதற்கு ஏற்றதாக இருக்கிறதாம். அங்கு ஒரு கண்ணாடித் தொழிற்சாலைகூட இருக்கிறது. சேலம் மாவட்டத்திலே பீங்கான் போன்ற ஒருவித மண், பாறை பாறையாகக் காட்சியளிக்கிறதாம்.

திருநெல்வேலி மாவட்டமும், கோவை மாவட்டமும் பருத்திக் காடுகளின் தலைமைப் பீடங்கள்.

இவை மட்டுந்தானா? வாணிபம் நடாத்துவதற்கேற்ற துறைமுகங்களுக்குக்குறைவா? மரக்கலங்கள் செய்வதற்கேற்ற மரங்கள் அடர்ந்த காடுகள் கொஞ்சமா? தொழிற்சாலைகள் இயக்குவதற்குத் தேவையான மின்சாரத்தைத் தரவல்ல நீர்வீழ்ச்சிகள் இங்கு இல்லையா? சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியையும், பைக்காராவையும், மேட்டூர் அணையையும், பாபநாசம் நீர்வீழ்ச்சியையும் நம்மால் மறக்கமுடியுமா?

சிவஞானத்துக்குக் காணிக்கையாக்குகிறோம் இவைகளை. கிராமணியார் மறுக்கமாட்டார். அவரால் மறுக்கமுடியாது. என்றாலும் பேசுவார். பேசிக்கொண்டு தானிருப்பார். அது அவரது வட்டாரத்தின் பண்பு!

46000 பேல்களுக்கு மேல் நூல் உற்பத்தியாகிறது நமது நாட்டிலே. நம் நாட்டு மக்களுக்குத் தேவையானது 30000 பேல்களுக்கு மேலில்லை. என்றாலும் இங்கே நூல் பஞ்சம்! ஏன் இந்த நிலை என்று நாம் கேட்கிறோம் காரணத்தோடு. சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பதில் இல்லை இதற்கு!

பொன் விளையும் நாட்டிலே பஞ்சம் ஏனப்பா என்கிறார். பதிலில்லை. சிவஞானம் சீறுகிறார். ஆனால் சிந்திக்க மறுக்கிறார். கண்டனக் கணைகளை நம் மீது ஏவுகிறார். ஆனால் கருத்துக்கு வேலைதர இசையேன் என்கிறார். மீசையைமுறுக்கி கண்களை அகல விரிக்கின்றார். ஆனால் வரலாறும் பூகோளமும் அருமையாகப் புகட்டும் பாடங்களைக் கற்கமாட்டேன் என்கிறார்.

குன்றத்தூரின் துப்பாக்கிச் சத்தம் நம் காதுகளில் இன்னும் ஒலித்துக்கொண்டுதானிருக்கிறது. சுருண்டுவிடவில்லை நாம். நாரணயக் கலத்தால் நாம நசுங்கிப்போகவில்லை. மதுரையிலே கண்டோம் மந்தமதியினர் செய்த சூழ்ச்சியை. மதுரைப் பந்தலுக்குவைக்கப்பட்ட நெருப்பு நம்மை எரித்துவிடவில்லை. மாறாக, அறிஞர் அண்ணா கூறியது போல், நமது மாநாடுகளுக்கு இப்பொழுது அதைவிடப்பெரிய பந்தல் தேவைப்படுகிறது! தேனீ நம்மைக் கொட்டியது. தேய்ந்துவிடவில்லை நாம்.

புகழ்ச்சிக்கும் பூசலுக்கும்மண்டியிடாத நாம், எதிர்ப்பையும், ஏசலையுங்கண்டு ஏமாந்து போகாத நாம், கண்ணீருக்கிடையே, இரத்தத்தின் ஈரத்திலே வளர்ந்து வரும் நாம், நேற்று கிளம்பியிருக்கும் இந்த சிவஞானத்தின் எதிர்ப்பைக் கண்டா மருண்டுவிடுவோம்? அவர் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார். பாவம்.

அவர் கேட்கிறார், மலையாளம் மதித்ததா, கன்னடம் கவனிக்குமா, ஆந்திரம் ஆதரிக்கிறதா என்று. அதோடு அவர் நின்றுவிடவில்லை. மேலும் கேட்கிறார் "அங்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்ய அவகாசம் இல்லை என்கிறார்களே. கதை, வசனம் எழுத எப்படி அவர்களுக்கு அவகாசம் கிடைக்கிறது" என்று! விபரீதபுரியினரின் கூட்டத்தை ஆதரிக்கிறார் அல்லவா? விசித்திரமாகத்தான் இருக்கும் அவருடைய பேச்சு!

நான் ரஷியாவுக்குச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். நான் ரஷியாவுக்குச் செல்வதை அடியோடு விரும்பாதவன் எனது தோழன். அது மட்டுமல்ல, அங்கு செல்வது, செல்ல முயற்சிப்பது பாவம். ஆபத்து என்றெல்லாம் சொல்கிறவன் எனது தோழன். ரஷியாவுக்கு நான் புறப்பட்டுவிட்டேன். பாதி தூரம்வரை நான் சென்றுவிட்டேன். பல அசந்தர்ப்பங்களின் காரணமாக நான் பல இடங்களில் தங்க வேண்டியதிருக்கிறது. இதனால் ரஷியாவுக்கு நான் முன்னரே போய்ச் சேருவது தடைப்படுகின்றது. இப்பொழுது எனது தோழன் என்ன சொல்கிறான் தெரியுமா? 'அங்கே, இங்கே என்று பல இடங்களில் தங்குவதற்கு நேரமிருக்கிறது, ரஷியாவுக்குச் சீக்கிரம் போய்ச் சேருவதற்கு மாத்திரம் நேரம் கிடைக்கவில்லையோ" என்று கேட்கிறான் அவன்! என் தோழனைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ரஷியாவுக்கு நான் செல்வதை கொஞ்சங்கூட விரும்பாத எனது தோழன், நான் ரஷியாவுக்குப் போய்ச் சேராததைப் பற்றிக் கவலைப்படுகிறான்!! கவலைப்படவேண்டிய அவசியம் அவனைப் பொறுத்த அளவிலே உண்டுமா? இல்லை. எனது தோழனைப் போல்தான் கிராமணியார் அவர்களும்!

"திராவிடநாடு" கோருவதே தவறு என்பவர் ம. பொ. சி., ரஷியாவுக்குப் போவது தவறு என்று கூறும் எனது தோழனைப் போல! என்றாலும் கிராமணியார் கவலைப்படுகிறார்! கதை வசனம் எழுத நேரமிருக்கிறது. ஆந்திர, கேரள, கன்னடப் பகுதிகளில் பிரச்சாரம் செய்ய நேரமில்லையாம்' என்று சொல்கிறார் கிராமணியார், பல இடங்களில் தங்குவதற்கு நேரமிருக்கிறது, ரஷியாவுக்குச் சீக்கிரம் சேருவதற்கு ஏன் நேரமில்லை' என்று கேட்கும் எனதுதோழனைப் போல!!

தமிழ்நாடு தவிர மற்ற பகுதிகளில் நாம் பிரச்சாரம் செய்தால் என்ன, பிரச்சாரம் செய்யாவிட்டால்தான் என்ன? நமது அடிப்படை பிரச்சினையை—திட்டத்தை—நமது பிறப்புரிமையை ஒப்புக்கொள்ளாத—அதே சமயத்தில் எதிர்ப்பு முகங்காட்டும் கிராமணியார் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. என்றாலும் கவலை கொள்கிறார் "முரசு" ஆசிரியர்! பரிதாபமாக இருக்கிறது அவரது நிலையைப் பார்க்கும்பொழுது!!

நமது பாதைமுட்கள் நிறைந்தது. இல்லை, நமது பாதையிலே முட்கள் வீசப்படுகின்றன. முட்களை எடுத்து தூரே எறிந்துவிட்டு, இலட்சியபுரியை நோக்கி நடக்கிறோம் நாம். எந்தக் கிராமணியார் நம்மை நோக்கிக் கண்டனக் கணைகளைத் தொடுத்த வண்ணமிருக்கிறாரோ, எந்த கிராமணியார் யூனியனுக்குள் (!) தனி மாகாணம் (?!) கேட்கிறாரோ, அந்த கிராமணியார், தனி மாகாணம் கோருவதுகூட மகா தவறு என்று கூறும் ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் தலைவர் கோல்வால்கரை எதிர்த்துப் பேசினால் அதில் அர்த்தமிருக்கிறது. சமுதாயத்தின் இன்றைய நிலை அவருக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவும் அவர் விரும்பவில்லை போலும்!

நிறைவற்ற வடநாட்டு ஆட்சியின் அலங்கார லீலைகளை நாம் எப்படி மறக்கமுடியும்? சென்னையையும் பீஹாரையும் நடத்திய முறையை நம்மால் மறக்கமுடியுமா? ராமபாத சேகர் தாமோதர அணைக்கட்டுக்கு ரூபாய் 176 கோடி ரூபாய் ஒதுக்கி விட்டு, நெல்லை மாவட்டத்தின் மணிமுத்தாறு திட்டத்துக்கு, நாலய்ந்து கோடி ரூபாயே தேவையே இருந்தபோதிலும், நெல்லை மக்களிடத்தில் வெட்கமில்லாமல் கடன் வாங்கி அணையைக் கட்டும் மந்திரிகளை மறக்க முடியுமா? கல்விச்சாலைகளுக்குப் பணமில்லை பணமில்லை என்று கையைவிரித்தஆட்சியிடம், ராணுவச் செலவுக்காக 182 கோடி ரூபாய் கொட்டியதை மறக்கமுடியுமா? வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்காக இந்திய அரசியலார் செலவிட்ட தொகை ரூபாய் 25 35.210, என்பது எவ்வளவு மதிப்பு வாய்ந்ததென்பதை மறக்க முடியுமா? அன்னிய நாடுகளின் தூதவர்களை வரவேற்பதில் ரூபாய் 151597 செலவிட்டதை மறக்கமுடியுமா? யூனியன் சர்க்காரிலுள்ள குறிப்பிடத் தகுந்தவர்கள் பிரயாணஞ்செய்துவரும் ஆறு விமானங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு இருபது லட்ச ரூபாய் செலவாகி வருவதை மறக்கமுடியுமா? வெளிநாட்டு தூதுவராலயங்களில் நடக்கும் ஊழல்களை மறக்க முடியுமா? சமீபத்தில் "ஹனுமான்" என்ற ஒரே விமானத்துக்காக மொத்தம் ரூபாய் 4,54,260—8—0 செலவழிந்

(15-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

சென்னை 24—11—51 சனிக்கிழமை


# மதுரையில் பொதுக்குழு

## மகத்தான முடிவுகள்.

★

"இவர்களென்ன தேர்தலுக்கு நிற்கப்போகிறார்களா இல்லையா?"

"தேர்தலில் நிற்கவில்லையென்றால் இவர்களுடைய ஓட்டுகளை யாருக்குக் கொடுக்கப் போகிறார்கள்?"

"இவர்களைப் போலவே மூற்போக்குக் கருத்துப் படைத்தவர்களாயிற்றே கம்யூனிஸ்டுகள்—அவர்களுக்குத் தங்கள் ஓட்டுகளைத் தருவார்களோ?"

"முன்னாளில் இவர்களுடன் பற்றும் பாசமும் கொண்டிருந்தவர்களாயிற்றே ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள்! ஒருவேளை அவர்களுக்குத் தங்களுடைய ஆதரவை அளிப்பார்களோ?"

"அம்பேத்காரின் அறிவுத் திறமையை நாள்தோறும் பாராட்டும் நல்லியல்பு படைத்தவர்களாயிற்றே இவர்கள்! எனவே, அவருடைய கட்சியை இவர்களுடைய ஆதரவு, தழுவிக் கொள்ளுமோ?"

"சமதர்மம்—புது வாழ்வு—பாட்டாளி என்றெல்லாம் பேசுகிறார்கள் சோஷியலிஸ்டுகள் என்பதற்காக, தங்களுடைய ஓட்டுகளை அவர்களுக்கு அளித்தாலும் அளித்து விடுவார்களோ?"

"அல்லது, காங்கிரசை எதிர்த்து நிற்பவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்களுக்கே தங்கள் ஓட்டு என்று பொதுவாகக் கூறி விடுவார்களோ?"

"அல்லது, அபேட்சகர்கள் அணிந்துகொண்டிருக்கிற 'லேபில்' எந்தக் கட்சியினுடையது என்பதைக் கவனிக்காதீர்கள். ஒவ்வொரு அபேட்சகருடைய தகுதி—திறமை—நாணயம்—சுயநலமின்மை ஆகிய நற்பண்புகளைச் சீர்தூக்கிப் பார்த்து வாக்குகளை அளியுங்கள் என்று சொல்லிவிடுவார்களோ?"

"ஒருவேளை, இந்தப் பொதுத் தேர்தலையே முற்றிலும் பகிஷ்காரம் செய்வோம் என்று வீர முழக்கமிட்டுவிட்டு, தேர்தலை விட்டே முற்றிலும் ஒதுக்கிவிடுவார்களோ?"

இப்படியெல்லாம்தான், உரையாடல், தமிழ் நாடெங்கும் நடந்துகொண்டிருந்தது சென்ற ஐந்தாறு மாத காலமாக.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பொதுத்தேர்தலில் எத்தகைய பங்கு கொள்ளப் பேசுகிறது?—இந்தக் கேள்வியைத்தான் தமிழ்மக்கள் கேட்டபடி இருந்தனர், தேர்தல் பிரச்னை நாட்டிலே தோன்றி வளரத்தொடங்கிய நாள்முதலாக.

பகைவரும் கண்டு வியந்து போற்றும் அளவு, மாற்றுக் கட்சித் தோழர்கள் ஆச்சரியத்தால் அசையாச் சிலையாகும் அளவு, ஆட்சிப் பீடத்தை அலங்கரிப்பவர்கள் அச்சத்தால் தாக்கப்பட்டு அலறித் துடிக்கும் அளவு, திராவிட முன்னேற்றக் கழகம், எழுச்சியும் வளர்ச்சியும் பெற்று, வீர நடை நடந்து வருகிறது திராவிடத் திருநாட்டில்.

இவ்வளவு மகத்தான செல்வாக்கும் மட்டற்ற புகழும் படைத்த இயக்கமாக இது இருப்பதனால்தான், நாட்டு மக்கள் அத்தனை பேருடைய கருத்தும், இந்தக் கழகம் பொதுத் தேர்தலில் எத்தகைய பங்கு கொள்ளப்போகிறது என்பதை அறிவதிலே இத்தனை ஆர்வம் காட்டிடலாயிற்று.

நவம்பர் 17ஆம் நாள் மதுரையில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு, அடுத்துவரும் பொதுத் தேர்தலில், கழகம் எத்தகைய பங்கு கொள்ளும் என்பதைத் திட்டவட்டமாக எடுத்துக் காட்டிவிட்டது.

**1. திராவிடத் தனியரசுப் பிரச்சினையை ஆதரிக்கிறேன்.**

**2. சட்ட சபையிலோ பார்லிமெண்டிலோ உறுப்பினரானால், மேற்கண்ட பிரச்சினை சம்பந்தமாகவும், அதன் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாகவும், தி. மு. கழகக் கொள்கைகளுக்கு ஆதரவு தேடும் வகையில் பணியாற்றி வருவேன்.**

**3. சுரண்டலையும் எதேச்சாதிகாரத்தையும் ஒழிக்க தி. மு. கழகம் வெளியிடும் திட்டங்களுக்கு ஆத**

ரவு கிடைக்கும் விதமாகவும் சட்ட சபையிலும் பார்லிமெண்டிலும் பணி யாற்றுவதாக உறுதி கூறுகிறேன்.

என்னும் இந்த மூன்று நிபந்தனைகள் பொறிக்கப்பட்ட ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திடுகிற கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், காங்கிரஸ் அல்லாத முற்போக்கு வாதிகள் ஆகியோரை மட்டுமே ஆதரிப்பது என்று பொதுக்குழு தீர்மானித்திருக்கிறது.

அப்படிக் கையெழுத்திட்டுத் தருகிற அபேட்சகர்களின் பட்டியலை, கழகப் பொதுச்செயலாளர், டிசம்பர் 13, 14, 15, 16 தேதிகளில் சென்னையில் நடைபெற இருக்கிற கழக மாநில மாநாட்டின்போது சமர்ப்பிக்க வேண்டுமென்றும், அப்படி அவர் சமர்ப்பிக்கும் வரையில், கழகத் தோழர்கள், எந்தக் கட்சிக்கோ—தனி நபர்களுக்கோ, பிரசாரம் செய்யவோ பணியாற்றவோ கூடாது என்றும் பொதுக்குழு திட்ட வட்டமாக அறிவித்திருக்கிறது.

பொதுக் குழுவின் இந்த முடிவுகள் மிகவும் நியாயமானவை. கழகத் தோழர்கள் அனைவராலும் நிச்சயம் ஒப்புக்கொள்ளப் படவேண்டியவை.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை இலட்சியம் சுதந்தர சமதர்ம திராவிடத் தனி அரசு அமைப்பது என்பது.

அந்த இலட்சியக் கோட்டையில் வெற்றிக் கொடியைப் பறக்கவிட வேண்டும் என்பதற்காகத்தான், கழகத் தோழர்கள், தியாகத் தழும்புகளை அடிக்கடி தங்கள் உடலிலே தாங்கிவருகின்றனர்.

இயக்கத் தோழர்கள், வேறு பல நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் பாடுபடுகிறார்கள் என்றபோதிலும், அந்த நோக்கங்கள் யாவும், திராவிடத் தனி நாடு பெறுவது என்கிற மூலநோக்கத்துக்குத் துணை புரியும் உதவி நோக்கங்களாகவே கொள்ளப்படுகின்றன.

இன்பத் திராவிடமே, இயக்கக் காளைகளின் இருதயகீதம்—இலட்சிய முழக்கம்—வாழ்க்கையின் குறிக்கோள்.

எனவே, திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையை, வெளிப்படையாகவும், மனமாரத முறையிலும், நாணயமான வகையிலும் ஒப்புக்கொள்ளாதவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, அவர்களுக்கு நம்முடைய ஓட்டுகளைத் தருவது என்பது நாணயமும் ஆகாது. நம்முடைய கட்சிக்கு நாம் செய்ய வேண்டிய கடமையும் ஆகாது.

நம்முடைய அடிப்படைக் கொள்கையும் மூலாதார நோக்கமுமாகிய பிரிவினைக் கோரிக்கையை ஒப்புக்கொள்ள மறுப்பவர்களுக்கு ஓட்டுப் போடுவது, நம்முடைய கட்சிக்கு நாம் துரோகம் செய்வதாகவே பொருள்படும்.

எனவேதான், மதுரையில் கூடிய பொதுக்குழு, பிரிவினைக் கோரிக்கையைத் திட்டவட்டமாக ஒப்புக்கொண்டு உறுதித் தாளில் கையொப்பமிட்டுத் தருகின்ற முற்போக்கு அபேட்சகர்களுக்கு மட்டுமே, தன் ஓட்டுகளைத் தருவது என்று முடிவு செய்திருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களோ, அல்லது அந்தக் கட்சியினரால் உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய முன்னணி அமைப்பினரோ அல்லது வேறு முற்போக்கும் அபேட்சகர்களோ மேற்கண்ட விதமான உறுதியைத் தருவார்களானால் ஜாம் ஜாமென்று அவர்களுக்கு ஓட்டுப் போடுவோம். அவர்களைத் தாராளமாக ஆதரிப்போம். அப்படியில்லாமல், உங்களுடைய ஓட்டுகள் மட்டும்தான் எங்களுக்கு வேண்டும், உங்களுடைய கொள்கைகள் எங்களுக்குத் தேவையில்லை என்று கூறிவிடுவார்களானால், நாம், அவர்களை விட்டு ஒதுங்கியே இருப்போம். பொதுத் தேர்தல் தொடர்பாக, மதுரை, நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கிற சிறந்த வழி, இது.

பொதுத் தேர்தலில் நம் கடமை எது என்பதை வரையறுத்துக் கொடுத்திருக்கிற முறை எப்படிச் செம்மையானதாகவும் சிறந்ததாகவும் இருக்கிறதோ, அப்படித்தான், மாநில மாநாட்டுக்கான வரவேற்புக் குழுவை அமைத்துள்ள முறையும், கழக அமைப்பைச் செம்மைப்படுத்தும் சட்டதிட்டங்கள் தொகுக்கப்பட்டுள்ள வகையும், மிகச் சிறந்தனவாக அமைந்துள்ளன.

சீரிய முறையில் செயலாற்றியிருக்கிறது பொதுக்குழு.

சிறந்த முடிவுகளை இயக்கத்திற்கும் நாட்டிற்கும் நல்கியிருக்கிறது.

பாராட்டுகிறோம் பொதுக் குழுவை. போற்றுகிறோம் அது அளித்துள்ள முடிவுகளை.

---


## "போர்வாள்" சந்தா விவரம்

★

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ. 6 8 0 |
| 6 மாதம் | ரூ. 3 4 0 |

**போர்வாள் அலுவலகம்**
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

சிறுகதை :

# மோகினிப் பிசாசு

[தெ. பா. சம்பந்தன்]

டக், டக், டக்

..................."

டக், டக், டக்

"..................."

"குமார்....குமார்..."...டக், டக் டக்

"யாரது"

"நான்தான் கோபால். கதவைத்திற"

அடையாளச் சிட்டை, படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில சொருகிவிட்டு எழுந்து போய் நான் கதவைத்திறந்தேன்.

"எவ்வளவு நேரம் கதவைத் தட்டுவது. இவ்வளவு நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய்?"—அவனுடைய குரலில் ஒருவித அச்சமும் நடுக்கமும் தொனித்தன. அவன் பேசிக் கொண்டே அறையின் கதவை விசையாக மூடித் தாளிட்டான்.

"நாவல் படித்துக் கொண்டிருந்தேன். சுவாரசியமான கட்டத்தில் சனியன் போல நீ வந்து கெடுத்துவிட்டாய். அது இருக்கட்டும், இவ்வளவு நேரம் நீ எங்கிருந்து வந்தாய்"?—நான் பேசிக்கொண்டே நடந்தேன். அவன் என்னைப் பின் தொடர்ந்தான்

"பீச்சுக்குப்போயிருந்தேன்"

"மணி பன்னிரண்டாகப் போகிறதே இவ்வளவு நேரமா பீச்சிலிருந்தாய்?"

இதுவரை நான் அவன் முகத்தை உற்றுப் பார்க்கவில்லை. திடீரென்று ஏனோ திரும்பினேன், திடுக்கிட்டுப் போனேன். அவன் கால்கள் 'வெடவெட' வென்று நடுங்கிக் கொண்டிருந்தன. தலைமயிர் அலங்கோலமாகக் காட்சியளித்தது. சவம் போல வெளிறிட்டுப் போன அவன் முகத்தில் முத்துமுத்தாக அரும்பின வியர்வைத் துளிகள் என் நெஞ்சையே ஒரு கலக்கு கலக்கிவிட்டன. அவனுடைய உதட்டின் அடிப்பாகத்தில் ஏற்பட்டிருந்த காயத்தினின்று வழிந்த இரத்தம் உறைந்து போய்க்கிடந்தது. பேச நாவெழாமல் நான் சிலைபோல் நின்றேன். சற்று நேரம் அமைதி!

"என்னடா கன்னத்தில் இரத்தமாக இருக்கிறதே' அமைதியைக் கலைத்தது என் குரல்.

"என்ன கூறுவதென்றே எனக்குப் புரியவில்லை. எனக்குப் பயமாக இருக்கிறது குமார்"

"பயப்படாதே, நடந்ததை விவரமாகக் கூறு"

"மோகினிப் பிசாசைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கின்றாயா?'

"இல்லை"

"எவனோ ஒருவன் தன் மனைவியை அடித்து நொறுக்கி, இருப்பு வாராவதி இருக்கிறதே அதன் மேலிருந்து பிடித்துத் தள்ளிவிட்டானாம். அதிலிருந்து அவளுடைய ஆவி அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறதாம். தினமும் பத்து, பன்னிரண்டு மணிக்கு அது அங்கே உலவ வருமாம். அது கூப்பிடும் போது திரும்பிப் பார்க்காமல் நடக்கவேண்டும். திரும்பினால் அறைந்துவிடும். இது கூட நீ கேள்விப்பட்டதில்லையா?"

"கூறினவன் யார்? கொண்டு வா அவனை இப்படி. ஒரு பொன் பதக்கமாவது பரிசளிப்பேன். ஆஹா என்ன கற்பனை! என்ன கற்பனை!!"

"குமார் விளையாடாதே. நான் கூட இத்தனை நாள் நம்பாதிருந்தேன். ஆனால் இன்றைக்குக் கண்கூடாகக் கண்டுவிட்டேன்"

"..................."

"மெரினாவிற்குப் போய்விட்டு வந்துகொண்டிருந்தேன். ஜிலு, ஜிலு வென்று வீசிய கடல் காற்று மனதிற்கு இதமாக இருந்தது. நடக்க நடக்கத் தூரமே தெரியவில்லை. இரும்பு வாராவதியின் அருகில் வரும் போது பின்னால் யாரோ கைதட்டிக் கூப்பிடுவது போல இருந்தது. நம்மைக் கூப்பிடுபவர்கள் யாராக இருக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டே நின்றேன், கல கலவென்ற சிரிப்பொலியும் சலசலவென்ற வளை ஒலியும் ஒன்றன்பின் ஒன்றாக என் செவியைத் தாக்கின. உடனே எனக்கு மோகினிப் பிசாசின் நினைவு வந்தது. பயந்து விரைவாக நடக்க முயன்றேன். ஆனால் அந்தப் பிசாசு இரண்டெட்டில் ஓடிவந்து என் இரு கரங்களையும் கெட்டியாகப் பற்றிக்கொண்டு என் ராசா என்று கூறி மறுபடியும் சிரித்தது. நான் உடனே அதன் பிடியை உதறித் தள்ளிவிட்டு நடக்க யத்தனித்தேன். ஆனால் மறு கணம் அதன் கை என் கன்னத்தைத் தாக்கிற்று......"

"போதும் நிறுத்திக்கொள். இதையெல்லாம் நான் நம்ப மாட்டேன். மோகினியாவது பிசாசாவது எல்லாம் சுத்த ஹம்பக்"

"என் முகத்தில் உள்ள காயத்தைப் பார்த்த பின்னுமா

குமார் உனக்கு நம்பிக்கை யேற்படவில்லை''

நான் அவனுக்கு ஒன்றும் மறுமொழி கூறவில்லை. நாவலை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தேன். வண்டியில் பின் பளு அதிகமாகி விட்டால் குதிரை ஓடாது. 'இடக்குப்' பண்ணும். மனித மனம் கூட அப்படித்தான் போலும்! எவ்வளவுதான் முயன்றுபார்த்தாலும், கோபால் கூறிய மோகினிப் பிசாசைப்பற்றித்தான் மனம் சிந்திக்கலாயிற்றே தவிர, நாவல் படிப்பதில் மனம் ஓடவில்லை. புத்தகத்தை அப்படியே மூடிவைத்துவிட்டு உறங்கிவிட்டேன்.

## 2

மறுநாள் இரவு எப்பொழுது மணி 12 ஆகும் என்று காத்துக் கொண்டிருந்தேன். கடல் ஓரே இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தது. பாதையில் வரிசையாக அமைக்கப்பட்டிருந்த 'மெர்குரி' விளக்குகள் தூரப் பார்வைக்கு வரிசையாக அடுக்கப்பட்ட விண்மீண்கள் போலக் காட்சியளித்தன. அருகில் இருந்த ஒரு விளக்கு பூர்ண சந்திரனுக்காவது களங்கம் உண்டு. ஆனால் எனக்குக் களங்கமே கிடையாது என்று கர்வத்தோடு கூறுவது போல நிமிர்ந்துநின்றுகொண்டிருந்தது. தொலைவில் இருந்த 'பிரஸிடென்ஸி கல்லூரிக்' கடிகாரம் மணி 12 என்பதை அறிவித்தது. நான் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு 'டார்ச்' விளக்கை ஒரு முறை எரிகிறதாவென்று பரிசோதித்துவிட்டு இரும்பு வாராவதி நோக்கி நடந்தேன். என் உள்ளம் ஏனோ படபடத்தது. துரிதமாகத் துடித்த இருதயத்தின் வேகம் காதில் தெளிவாகப் புலப்பட்டது.

திடீரென்று யாரோ என்னைக் கைதட்டி அழைக்கும் ஒலி பின்புறமிருந்து வந்தது- கால்கள் துவள ஆரம்பித்தன. என் தேகம் மட்டுப்பட்டது. கலகலவென்று ஒரு பெண் சிரிப்பது போன்ற ஒலி கிளம்பிற்று. என் இருதயம் வேக வேகமாக ஓடிற்று ஆனால் தைரியத்தை முயன்று வரவழைத்துக் கொண்டேன். தூரத்தில் மங்கலாக ஒரு உருவம் வருவது தெரிந்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் எங்களுக்கிடையே இருந்த தூரம் குறைந்து கொண்டே இருந்தது. அருகில் நெருங்கி அப் பெண் உருவம் ஒரு 'வெண்கலச் சிரிப்பு' சிரித்தது. கண்களுக் கடுத்தபடியாகப் பெண்கள் உபயோகப் படுத்தும் வசீகர ஆயுதமல்லவா சிரிப்பு!

ஒன்றுமே விளங்காது நான் சிலைபோல அசைவற்று நின்று கொண்டிருந்தேன். அடுத்த கணத்தில் அதனுடைய குளிர்ந்த விரல்கள் என் கரங்களைத் தீண்டி ஸ்பர்சித்தன. ஆனால் நான் மறுகணமே 'டார்ச்சின்' விசையை அழுத்தினேன். 'குபீ'ரென்று ஒளி கிளம்பிற்று. என் எதிரே நான் நிற்கக் கண்டேன், 'மோகினிப் பிசாசை யல்ல, ஆனால் அழகே உருவெடுத்த ஓர் பெண்ணை! திடீரென்று ஏற்பட்ட ஒளி அவளுடைய கண்ணைக் கூசிடச் செய்தது. அவள் இமைகளை மூடி மூடித் திறந்ததே ஒரு அழகாகத்தான் இருந்தது!

இமைப்போதில் விளக்கை அணைத்துவிட்டு அவளுடைய இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்து கொண்டேன். அவள் இதை எதிர்பார்க்கவில்லை ஸ்தம்பித்துப் போனாள்.

''நீ யார்? உனக்கிங்கென்ன வேலை?''

''ஐயையோ.....என் கையை விடுஐயா''

தப்பித்துப் போகத்தான் தந்திரம் செய்கிறாள் என்று நான் எண்ணினேன். ஆனால் அவளுடைய பரிதாபகரமான குரல் என் மனத்தை இளக்கிற்று. நான் அவள் கையை விடவில்லை; என்றாலும் பிடியைச்சற்று தளர்த்தினேன்.

''ஐயா, உனக்குப் புண்ணியமாகப் போகிறது. என் கையை விடுயா. கையிலெ காயம். வலிக்கிறது'' உருகாத உள்ளத்தையும் உருகவைக்கும் சக்தி அவளுடைய அந்தக் குரலில் இருந்தது. நான் அவள் கையை நழுவவிட்டேன்.

''கையில் காயமா? என்ன காயம்? எப்படிப் பட்டது?'

''நேற்று ஒருவர் இந்தப் பக்கம் வந்தார். நான் அவர் கையைப் பற்றினேன். ஆனால் அவர் உதறித் தள்ளினார். எனக்கு வந்த கோபத்தில் ஓங்கி ஒரு அறை விட்டேன். வளையல் உடைந்து பொத்துக்கொண்டது.''

''ஆமாம் நீயேன் இப்படி போகிறவர் வருகிறவர்களைத் தொந்தரை செய்கிறாய்?''

''அது தானய்யா என் பிழைப்பு.''

' பிழைப்பா?''

''ஆம் நான் ஒரு விபசாரி. இணங்கினவர்களுக்கு நான், இன்பவல்லி இணங்காதவர்களுக்கு...........''

''இணங்காதவர்களுக்கு?''

''இணங்காதவர்களுக்குப் பேய்''.

''இல்லை. மோகினிப் பிசாசு என்று கூறு''

''அப்படித்தான், வைத்துக் கொள்ளுங்களேன்''.

(14-ம் பக்கம் பார்க்க)




[3-11—51 இதழ் தொடர்ச்சி]

**முன்கதை:**—நெய்தல் நாட்டுத் தளபதி, பரிவின்பனும், அவன் மெய்க்காப்பாளனாகிய உதயனும் கொள்ளைக்கூட்டத்தாரால் குகை இல்லமொன்றில் சிறைவைக்கப் படுகின்றனர். அச் சிறையிலிருந்து அவ் வீரர்கள் தப்பி ஓடும் போது, எதிரில், கொள்ளைக் கூட்டத் தலைவன், தன் பரிவாரங்களோடு வரும் காட்சியைக் கண்டு, திகைத்து நின்றுவிடுகின்றனர். கொள்ளையர் தலைவன் நெய்தல் நாட்டு வீரர்களிடம் அன்புடன் பேசி, தன் குகை இல்லத்தைச் சேர்ந்த ஓர் அறைக்கு அவர்களை அழைத்துச் செல்கிறான். இவ்வளவு நல்லவனாக இருக்கிற நீ, கொள்ளைக் கூட்டத் தலைவனாக இருப்பது ஏன் என்று கேட்கின்றனர் நெய்தல் வீரர்கள். அவர்கள் அப்படிக் கேட்டதும், அவன், அந்த அறையில் உள்ள சுவர் ஒன்றை, நெருக்கினான். பிறகு—].

அந்தச் சுவற்றில், தான் இருப்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமலிருக்க அந்தச் சிறு திருகாணியை முறுக்கின அவன் கைகள். அந்தச் சுவர் பிளந்து கொடுத்தது, அவன் கைகள் அந்தப் பிளவின் உட்சென்று ஓலைச் சுவடிகளை எடுத்து வாரிக்கொட்டின! நெய்தல் நாட்டு வீரர்கள் வியப்போடு நின்று கொண்டிருந்தார்கள்.

"பரிவின்பரே! இந்த ஓலைச்சுவடிகளைப் படித்துப் பாரும்!..........." என்றான் அவன்.

அங்குக் குவிக்கப்பட்டிருந்த ஓலைச் சுவடிகளுள் ஒன்றையெடுத்துப் படிக்க ஆரம்பித்தான் பரிவின்பன்:

"வெற்றி வீரரே! வணக்கம். உமது வீரச் செயல்கள் நீதியை அடிப்படையாகக் கொண்டவை. நீர் தன்னலவாதியல்ல. பிறர் நலம் பேணுவதே உமது பிறவிப் பண்பு. பாலை நாடு உமக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது! பாலை மக்களின் நன் மதிப்பு என்றும் உமக்கு உண்டு. நன்றியுள்ளவர்கள் பாலை மக்கள்! நீர் பாலைவனத்திலே உள்ள பேருற்று! இதுவரை பாலை கண்டிராத ஒரு பெரு வீரர் நீர்! உமது அன்புள்ளம், உமது வீரத்திற்கு அணி செய்கிறது! ஏழையின் தோழர் நீர், அநீதியும் அக்ரமும் ஏதுமறியாதவர்களைப் பயமுறுத்தி இம்சிக்கும்போது நீர் உமது தோழர்களுக்காக, நீதிக்காகப் போராடுகிறீர்!......"

"இது உமக்குவந்த மடலா?...... யாரிடமிருந்து?" பரிவின்பன் துடிப்போடு கேட்டான்.

"ஆமாம் தோழரே! இது எனக்கு வந்த மடல்தான். இங்கு குவிக்கப் பட்டுள்ள அத்தனை மடல்களும் எனக்குப் பாலை நாட்டிலிருந்தும் முல்லை நாட்டிலிருந்தும் வந்தவை......இன்னும் சிலவற்றைப் படித்துப்பாரும். அவை, நான் சொல்லவேண்டியவைகளை உமக்குச் சொல்லும்!" என்றான் அவன் சிரித்துக்கொண்டே.

பரிவின்பன் மற்றொரு மடலை எடுத்துப் படித்தான்.

"வெற்றி வீரரே! வேங்கையின் அட்டகாசம் ஆட்டு மந்தையில் நிகழும் போது, வேங்கையை வீழ்த்தும் வீரராகிய உமக்குப் பாலை நாட்டின் பிரஜைகளான நாங்கள் இந்த அவசர ஓலை அனுப்புகிறோம். உமது உதவியைப் பெரிதும் நாடுகிறோம். நீர் அறிந்துள்ளபடி எங்கள் நாட்டில் இன்று நடைபெறும் ஆட்சி கொடுங்கோலாட்சியின் உச்சநிலையையடைந்து கொண்டிருக்கிறது! ஆட்சிப்பீடம், அரசியல் அரிச்சுவடி அறியாதோரின் கொலுமண்டபமாக உள்ளது! வேதமோதிகள் சட்டங்கள் பிறப்பிக்கும் வேலையை மேற்கொண்டுள்ளார்கள்! மன்னன் அந்தப்புரத்திலே குடியிருக்கிறான்! மாளிகையில் வெறும் கும்மாளமும் கூத்துமாகத்தான் இருக்கிறது! பணம் பாழாகிறது! மக்கள் வறுமையால் வாடுகிறார்கள்! ஒரு கும்பல் உல்லாச வாழ்வு நடத்துகிறது. விபீடண கும்பல் பல்லிளித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் தேய்கிறது. ஆரியம் தலை தூக்கி நிற்க முயலுகிறது. உழைப்பாளிகள் தங்கள் உதிரத்தைக் கொட்டிச் சம்பாதிக்கும் பணத்தின் பெரும் பகுதி வரியாக வாங்கப்படுகிறது. வரிதர மறுப்பவர்கள் வாட்களுக்கு விருந்தாக்கப்படுகிறார்கள். சிறையில் அடைத்துவைக்கப் படுகிறார்கள். சித்திரவதை செய்யப்படுகிறார்கள். வரிதந்துவிட்டு உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, ஒதுங்க இடமின்றி, பட்டினி கிடந்து பாதையோரங்களிலே பலப்பல மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். விபீடணர்களாக இருந்துகொண்டு, பூசுரன் ஆட்சிக்கு வக்காலத்துப் பேசிக்கொண்டு, உல்லாசமாக வாழ்வு நடத்துகிறார்கள் பணக்காரர்கள்! வறுமையில் வாடும் எங்கட்கு வாழ்வில் விமோசனம் அளித்து வீணர்களை வீழ்த்துமாறு உம்மிடம் வேண்டிக்கொள்கிறோம்.

முன்பு, பலமுறை நீர் அரண்மனையிலும், பூசுரர்களிடமும், விபீடணர்களிடமும் குவிந்துகிடந்த பணத்தையும், பொருட்களையும் சூறையாடி அவை தேவைப்பட்ட ஏழை மக்களுக்குத்தந்து அவர்கள் உயிரைக் காப்பாற்றியதையெல்லாம் எங்களால் என்றுமே மறக்க இயலாது! நீர் இந்த ஆட்சியாளர்கட்கும், அவர்தம் அடிவருடிகளுக்கும் இவ்வளவு முறை புத்தி கற்பித்திருந்தும் அவர்கள் போக்கு மாறவில்லை! இன்னும் அவர்களை

மனதிலே மக்களைப் பற்றிய யுவலை எழவில்லை! பணமும் பதவியும் திடீரென்று மனிதர்களைப் பற்றிக் கொண்டால் அவர்கள் மனிதத்தன்மையை இழந்து விடுகிறார்கள். அவர்கள் இருதயம் இரும்பாகிவிடுகிறது!......வீரர் திலகமே! நாடு இந்த நிலையிலிருக்கும்போது, நாட்டிலே மக்கள் வறுமையால் வாடிச்சாகும்போது, அந்த நிலைமையில் அரண்மனையில் ஒரு மாபெரும் விழா-கொண்டாட்டம்—நடைபெறப்போகின்றதாம். அளவு கடந்த பொருட்செலவில்! இந்நாட்டு மன்னனாகவுள்ள பூசுரனின் மகளின் பிறந்த தினவிழாவாம் அது! அன்று அரண்மனையிலே ஆயிரம் பார்ப்பனர்களுக்கு இராசபோஜனம் நடக்கப் போகின்றதாம்!......வெற்றி வீரரே! இந்நாட்டின் சொந்த மக்களின் கதி என்னவது! பாலையின் வருங்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு—நிர்ணயிக்கக்கூடிய சக்தியாவும் உம்மிடம்தான் உள்ளன! உம்மீதுதான் எங்கள் முழுநம்பிக்கையும் வைத்திருக்கிறோம்!......'' பரிவின்பன் படித்துமுடித்தான்.

''பரிவின்பரே! நீர் இப்பொழுது படித்த இந்த மடல்தான் எனக்குப் பாலையிலிருந்து கடைசியாக வந்தது! இங்குக் குவிக்கப்பட்டுள்ள மடல்களத்தனையும், எனக்கு பாலை மக்களும், முல்லை மக்களும் தங்கள் நாட்டில் நடைபெறும் அட்டூழியங்களை எடுத்துக் கூறி எழுதியவையும், நான் அவர்களுக்குச் செய்த பொருளுதவிக்காகவும், பண உதவிக்காகவும் நன்றியுடன் எழுதியவைகளுமாகும். நண்பரே! இப்பொழுது நீர் படித்த இந்த மடலிலிருந்து என்னைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பீர் என்று எண்ணுகிறேன். ஆம். நண்பரே! நான் கொள்ளைக்காரன். கொடுங்கோல் மன்னர்களுக்கும், அவர்களைப் புடை சூழ்ந்து அவர்களுக்கு ஒத்து ஊதிசாமாம் வீசிவரும் கும்பலுக்கும், பணத்தைக் குவித்து அழகு பார்த்துவரும் கும்பலுக்கும் நான் கொள்ளைக்காரன்......! நண்பரே! நான் கொள்ளையடிப்பது, பணத்தை அளவுக்கு மிஞ்சி வைத்துள்ளவர்களிடம்! நான் கொள்ளையடிப்பது மற்றவர்களின் உழைப்பைப் பெற்றுக் கொண்டு அதற்கேற்ற ஊதியம் தராத உலுத்தர்களிடம்! நான் கொள்ளையடிப்பது, நாட்டு மக்களை நசுக்கிப் பிழிந்து வரிகள் வாங்கி அவைகளைத் தவறான வழிகளிலே செலவு செய்யும் மன்னர்களிடம்! நான் கொள்ளையடிப்பது என்னுடைய சொந்த நலனுக்காக அல்ல! இதுவரை நான் கொள்ளையடித்த பொருட்களில் நூறில் ஒரு பாகம் கூட தற்போது என்னிடம் கிடையாது. அன்றன்று கொள்ளையடிக்கும் பொருட்களை அவை யார் யாருக்குத் தேவைப்படுகின்றனவோ அவர்களுக்குத்தந்து விடுவேன். தோழரே, நான் கொள்ளையடிப்பது, ஏழைகள் வாழ! உழைப்பாளிகள் வாழ்க்கையில் தங்கள் உழைப்பிற்கேற்ற பலனையெய்த! பணத்தைக் குவித்துள்ள பிண்டங்களுக்குப் புத்திபுகட்ட! பசி, பிணி, கொலை, தற்கொலை வறுமை ஆகியவை நாட்டில் இல்லாதொழியுமாறு செய்ய!........

நண்பரே! இப்பொழுது நீர் சொல்லும். நான் ஒரு கொள்ளைக் கூட்டத்தலைவனாக இருப்பது நியாயமற்றதா?........'' அக் கொள்ளைக் கூட்டத்தலைவன் உணர்ச்சியோடு பேசி முடித்தான்.

(தொடரும்)

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# துரோகி

திராவிடநாடு துணையாசிரியர்: **தில்லை—வில்லாளன் தீட்டியது!**

- சரிதம் தழுவிய நல்லதொரு பொன்னேடு!
- கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் எழுத்தோவியம்!
- வாழ்க்கைக்கோர் வழிகாட்டி!
- படிக்கப்படிக்கத் தெவிட்டாத தேன் மொழிகள்!

மேலட்டை மூன்று கலரில் ('ட்ரய் கலரில்') கண்ணைக் கவரும் முறையில் அலங்கரிக்கப்பட்டுள்ளது!

நிறைந்த பக்கங்கள் மிகவும் குறைந்த விலை ரூ. 2 0 0

மற்ற விவரம் பிறகு. விலைப் பட்டியலுக்கு எழுதவும்.

—விபரங்கட்கு—

**திராவிடன் பதிப்பகம்**

P. B. No 18, வேலூர் (N. A.)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

“இறந்து போன துன்மார்க்கர்களுடைய ஆவிதான் பிசாசாக உலவும் என்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்..........”

“ஆனால் நான் காம வெறி பிடித்த ஓர் துன்மார்க்கனின் தீச் செயலால் இன்று விபசாரியாக நடமாடுகின்றேன்”

“...................”

“ஏன் வாயடைத்துப்போய் விட்டீர்கள்? சூடான இட்டிலியினின்று மென்மையான ஆவி கிளம்புவதைப் போல என் புண்பட்ட இருதயத்தினின்று ஆத்திரம்தான் வெளிவருகின்றது. தயவுசெய்து என் சோகக் கதையைக் கேளுங்கள், எனக்கு ஆறுதல் கூறுங்கள். என்னால் வேதனை பொறுக்க முடியவில்லை.’

நான் ஓர் கல்லில் அமர்ந்தேன். அவளும் என் எதிரே அமர்ந்தாள்.

“உலகத்தில் பெரும்பாலோர் வாழவேண்டும் என்ற ஆசையை உள்ளடக்கியவர்களாகத் தானிருக்கிறார்கள். நானும் வாழத்தான் ஆசைப்படுகிறேன். இல்லாவிட்டால் விபசாரி என்ற விருதோடு நான் இன்னும் உலகத்தில் உலவிக்கொண்டிருப்பேனா? ஆசை வெட்கமறியாது என்று உலகத்தவர் கூறுவார்கள். என்னைக் கேட்டால் ஆசை வெட்கமறியாது என்பது மட்டுமல்ல மானமும் மரியாதையும் அறியாது. ஏன்? நீதியையும் நேர்மையையுங்கூட அறியாது என்பேன்.

அப்போது நான் ஆறாவது படிவம் படித்துக்கொண்டிருந்தேன். உலகமே இன்னதென்று தெரிந்துகொள்ளாத பருவம்! வெளுத்ததெல்லாம் பால் என்று கொள்ளும் வெள்ளை யுள்ளம்!!

“லல்லி, இப்படி வெகுளியாக இருக்கின்றாயே, நீ எப்படித்தான் இந்த உலகத்தில் பிழைக்கப் போகிறாயோ எனக்கு விளங்கவில்லை!” என்று அம்மா அடிக்கடி குத்திக் காண்பிப்பார்கள். பள்ளிசெல்லும் நேரம் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் கைதிபோல என்னை வீட்டில் அடைத்துவிட்டு, என்னிடம் உலக ஞானத்தை எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டாள்தனம். உலகத்தைப் பற்றிப் படித்து அறிய முடியாது. பார்த்துத்தான் அறிய முடியும். இது ஏனோ அவருக்கு எட்டவில்லை!

நான் இருந்த வீட்டின் எதிரில் ஒரு அறையைச் சந்திரன் வாடகைக்கு எடுத்துக்கொண்டான். அவனை எனக்கு முன்பின் தெரியாது. ஆனால் ஒரு நாள் மாலை நான் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும்போது என்னை அழைத்து என் நோட்டுப் புத்தகத்தைக் கேட்டான். அன்றுதான் முதன் முதலாக அவனும் ஆறாம் படிவம் படிக்கின்றான் என்பதை நான் அறிந்து கொண்டேன். அன்றுமுதல் நானும் அவனுக்குப் புத்தகங்களைத் தருவேன். அவனும் எனக்கு வேண்டிய புத்தகங்களைத் தருவான். ஒரு நாள் சந்திரன் என்னிடம் ஓர் நாவலை அளித்து அதனைப் படித்துவிட்டுக் கருத்தைக் கூறுமாறு வேண்டிக்கொண்டான். நானும் சம்மதித்தேன். அது ஒரு காதல் கதை. கதாநாயகன் ஓர் சீர்திருத்த வாதி. அவன் சாதி என்ற ஆற்றைக் காதல் என்ற பாலத்தை அமைத்துக் கடக்கிறான். நான் படித்துவிட்டு நாவல் சுவாரசியமாக இருப்பதாகக் கூறினேன். அவன் அதற்கு என்ன பொருள் கொண்டானோ எனக்குத் தெரியாது. ஆனால் “இது உங்களிடமே இருக்கட்டும். உங்களுக்கு இது ஓர் துணைவன்” என்றான். அதிகம் வளர்த்த நான் விரும்பவில்லை. எங்கள் நட்பு எங்களைக் காதலின் கடைசிகட்டத்திற்குக் கொண்டு போய்விட்டது. மாம் பழுத்தால் வௌவாலை வா என்று கூறி வரவேற்கத் தேவையில்லையாம்; அவை தாமாகவே வருமாம். இந்தப் பொறுப்பற்ற மனித சமுதாயத்தில்..........

ஆம், சாதி என்ற ஆற்றைக் காதல் என்ற பாலத்தை அமைப்பதன் மூலம் கடக்கலாம் என்று எக்களிப்போடு கூறின சந்திரன் அமாவாசையானான்! என் வயிற்றிலோ ‘வளர்பிறை’. என் நிலை எப்படியிருந்திருக்கும். சிந்தித்துப் பாருங்கள். சமுதாயத்தின் சந்தேகக் கண்கள் என்மேல் படையெடுத்தன. நான் வீட்டை விட்டே வெளியேறினேன் வீட்டை விட்டு வெளியேறினால் அபாயம் நீங்கும் என்று நான் போட்ட கணக்கு, பொய்த்துப்போய்விட்டது. நான் முகர்ந்த மலரானேன்.” என்று கூறி, பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிறு குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுதாள். நான் அவள் தலையை நிமிர்த்தி கண்களைத் தொடைத்து “அழாதே லல்லி, குறையையும் கூறிவிடு” என்றேன்.

“கூறுவதற்கு இன்னுமென்ன இருக்கிறது. அவ்வளவுதான். குளத்தில் கால்இடறி விழுந்தவனுவது மூன்று முறை மேலுக்குக் கிளம்ப முடிகிறது. ஆனால் இந்தப் பாழாய்ப்போன சமுதாயத்தில் வழுக்கி விழுந்த வனிதையர் கரையேற வழியே கிடையாது.”

“அப்படி இன்னொருதரம் என்னிடம் சொல்லாதே. லல்லி,

இதோ பார் நான் உன்னை ஏற்றுக்கொள்ளுகின்றேன்".

"வேண்டாம், வேண்டாம். தங்கமான குணம் படைத்த உங்கள் வாழ்க்கையை ஒரு சுவையற்ற விருந்தாக்க நான் விரும்பமாட்டேன். நான் ஓர் விபசாரி. என்னை மறந்துவிடுங்கள்".

"விபசாரி......இல்லை. நீ ஒரு மாஜி விபசாரி. ஒரு அருமையான காவியச்சுவடி செல்லரித்து விட்டதென்றால் அதைத் தூக்கித் தூர எறிபவன் முட்டாள். எஞ்சியுள்ள பகுதியைப் பயன் படுத்துபவனே விவேகி".

"ஆமாம். ஆனால் சமூகம் தூற்றுமே".

'ஆம் தூற்றும். முதலில். ஏனென்றால் அது காலங்கடந்த ஞானோதயர்கள் பட்டியலில் சேர்க்கப்படவேண்டிய ஒன்று"

"இதெல்லாம் உண்மையா? அல்லது நான் கனவு காண்கின்றேனா?"

"கனவுதான். ஆனால் நினைவாகிப்போன கனவு இது"

## 3

"கோபால், நாளையிலிருந்து நீ இரவு ஒரு மணிக்குக்கூட இரும்பு வாராவதி பக்கமாகப் போகலாம் வரலாம். ஒரு பயமுமில்லை. நான் அந்தப் பிசாசை ஓட்டிவிட்டேன்".

"உண்மையாகவா? அந்தப் பிசாசை உன்னால் எப்படி ஓட்ட முடிந்தது, குமார்? என்னிடம் விளையாடுகின்றாயா?"

"ஓட்டிவிட்டேன் என்று சொன்னேன். அது தவறு. வீட்டிற்கே அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்."

"என்னடா மடையன் மாதிரி உளறுகிறாய்"

"நான் உளறுகின்றேனா நீ உளறுகின்றாயா? போய்ப் பார் வாசலில் யார் நிற்பதென்று."

மயிர்கூச்செறியும் கூக்குரலும் அதனை அடுத்து வாசல் புறம் 'தடால்' என்ற சப்தமும் கேட்டன. நான் ஓடிப் போனேன். கீழே கோபால் மூர்ச்சையாகி விழுந்துகிடந்தான்.

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பதாக மந்திரி பக்தவத்சலனார் கூறியதை மறக்கமுடியுமா? வெளிநாட்டு மூலதனம் 610 கோடி ரூபாய்க்குமேல் இந்த நாட்டில் இருந்துகொண்டு, இந்த நாட்டைச் சுரண்டுவதைத்தான் நம்மால் மறக்க முடியுமா?

கிராமணியார் சிந்திக்கவேண்டும். ஆட்சியிலே வளம் இல்லை. ஆட்சியிலே திறமை இல்லை. காங்கிரஸ் இன்றைய தினத்திலே ஒரு சுயநலக்கூடாரமாய், பித்தலாட்டத்தின் உற்பத்திசாலையாய் மாறிவிட்டதை கிராமணியார் மறுக்க முடியாது. நாட்டிலே எப்படி உணவுப்பஞ்சமோ, அதேபோல், அதைவிட அதிகமாக காங்கிரஸ் வட்டாரத்திலே நேர்மைப்பஞ்சம். செங்கோலைக் கையிலே தாங்குவதற்கு முன் அதிகச் சம்பளம் வாங்கமாட்டேன் என்று கூறியவர்கள், இன்று பணத்திலே குளிக்கிறார்கள்.

இத்தகைய "இனம்கள்" நிறைந்த காங்கிரஸுக்குத்தான் "ஓட்டுப் போடுங்கள்" என்று கூறுகிறார். ம. பொ. சி. வெட்கமில்லாமல். நாட்டின் படப்பிடிப்பு ஒரு புதிராக இருக்கிறது அவருக்கு!

திராவிட நாட்டுப் பிரச்னை நமது இருதயத்தின் துடிப்பு, வாழ்ந்து தாழ்ந்த மக்களின் முன்னணி முரசு; வடவாட்சியின் இரும்புப்பிடிக்குச் சாவுமணி; என்பதை கிராமணியார் உணரவேண்டும். அவரது தெளிவில்லாத நெஞ்சம் தெளியவேண்டும். விபரீதபுரியிலிருந்து அவர் விவேகபுரிக்குக் குடியேறவேண்டும். விசித்திரவாணராக் இருக்கும் அவர் மதிவாணராக வேண்டும். காங்கிரஸ் என்பது நல்ல கொள்கையின் மரணப்படுக்கை என்பதை நாடு உணர்ந்துவிட்டது. கிராமணியாருடையதைப்போன்ற தெளிவில்லாத நெஞ்சங்களும் இனிதெளிந்துவிடும். தெளியவேண்டும்.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அழகைக் கண்டு பூரிப்படையும் சாதாரண மனித இதயம் கவிதை இலையிலே அழகுப் பொங்கலைப் படைக்கும் கவிஞர்களை எந்த எந்த உருவத்திலேயோ வாழ்த்தக் காத்துக்கொண்டிருக்கிறது!

* * *

"உயர்ந்த உணர்ச்சி மிக்க உள்ளத்தின் சங்கீதந்தான் கவிதை"... என்று வால்டேர் புகழ்ந்துகூறி "உள்ளம் தன்னுடனும்—இயற்கையுடனும் பேசும் மொழிக்குக் கவிதை என்று பெயர்"...என்று ஹேஸ்லிட் மகிழ்ந்து பேசிடும் அளவிற்குப் பெருமை படைத்தது அழகுக்கவிதை!

எமிலி டிக்கின்சன், "நான் ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது, என் உடம்பு சிலிர்த்து, என் தலை கிறுகிறுத்தால், அது கவிதை என்று உடனே உணர்கிறேன். எது கவிதை என்று கண்டுபிடிப்பதற்கு இந்த ஒரு வழிதான் எனக்குத் தெரியும்" என்று கூறுகிறார். அவரின் கருத்துப்படி உடம்பு சிலிர்த்து உணர்ச்சி வலையிலே சிக்கவைக்கும் கவிதைதான் உண்மையான கவிதையெனக் கொள்ளப்படுகிறது. கவிதையிலே ஏதேதோ ஆகாத சம்பவங்களைப் புகுத்துவதைவிட உள்ள உணர்ச்சியைத் தொடும்வகையிலே தீட்டுவதுதான்...நாடு ஏற்றுக்கொண்டு போற்றும் முறையாகும்.

இம்மாதிரியான முறையில் கவிதைகள் வெளியாவதற்குகந்த நிலையிலே கவிஞர்களின் உள்ளம் அமையவேண்டும். அப்போதுதான் கவிஞர்களும், அவர்களுடைய கவிதைகளும்...நாட்டின் பெரும்பாலோரால் ஏற்றிப் போற்றிடப் பெறுவர்.

# தி. மு. க. மாநில மாநாடு

17—11—51 சனிக்கிழமை மதுரையில் கூடிய பொதுக் குழு கூட்டத்தில் மாநாட்டுத் தலைவர் முதலியோர் கீழ்க் கண்டபடி தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| மாநாட்டுத் திறப்பாளர் : | தோழர். | கே. கே. நீலமேகம் |
| மாநாட்டுத் தலைவர் : | அறிஞர் | C. N. அண்ணாதுரை |
| வரவேற்புத் தலைவர் : | தோழர். | N V. நடராசன் |
| மாநாட்டுச் செயலாளர்கள் : | தோழர்கள். | காஞ்சி மணிமொழியார் |
| | | கி. மனோகரன் |
| மாநாட்டுப் பொருளாளர் : | தோழர். | சார்பு திருச்சி |
| விளம்பர செயலாளர்: | ,, | மு. கருணாநிதி |
| கலை அரங்க ஏற்பாடு: | தோழர்கள். | மு. கருணாநிதி |
| | | T. M. பார்த்தசாரதி |
| தொண்டர் படைத்தலைவர்: | தோழர். | K. M. கண்ணபிரான் |
| ,, உதவித் தலைவர்: | ,, | மார்க், காஞ்சிபுரம் |
| பந்தல் கமிட்டி உறுப்பினர்கள் : | ,, | C. V ராசன், |
| | ,, | A K. சாமி |
| | ,, | R. T. அரசு, |
| | ,, | கிருஷ்ணன் |
| கண்காட்சிக் கமிட்டி : | ,, | தில்லை வில்லாளன் |
| | ,, | சௌரிராசன் |
| | ,, | K A மதியழகன் |
| தீர்மானங்களைப் பரிசீலனை செய்யும் கமிட்டி | ,, | இரா நெடுஞ்செழியன், |
| | ,, | K. A மதியழகன், |
| | ,, | V. K. ஜான் |
| | ,, | E V. K. சம்பத், |
| | ,, | பராங்குசம் |

மாநில மாநாட்டு வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

மாநாட்டுக்கு முன் மாபெரும் ஊர்வலம் நடத்த அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

மாநாட்டுப் பந்தலில் தபால் டெலிபோன் நிலையங்கள் ஏற்பாடு செய்யப் படுகின்றன.

தூத்துக்குடி, கோவை, திருச்சி முதலிய இடங்களிலிருந்து தனி ரயில்கள் விடுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

அதிக பஸ்கள் விடவும், இரவில் கலை நிகழ்ச்சிகளின் பின் பஸ்கள் விடவும் போக்குவரத்து அதிகாரிகளுக்கு எழுதிக் கேட்கப்பட்டிருக்கிறது.


"ஜீவா"வின்
சிந்திக்கத் தூண்டும்
## நூல்கள்!

★

| | | |
|---|---|---|
| உயிரோவியம் | 2 | 0 |
| வேடதாரி ,, | 1 | 4 |
| பாட்டியின் மகள் | 0 | 4 |
| சந்தேகம் | 0 | 6 |
| வேனில் வந்தது | 0 | 6 |
| கவிஞனின் காதலி | 0 | 4 |
| அம்மான் மனைவி | 0 | 6 |
| வகுப்புரிமைப் போராட்டம் (க. அன்பழகன்) | 1 | 12 |
| அழகு ராணி ,, | 1 | 4 |
| கைதி (ஏ. கே. வேலன்) | 1 | 4 |
| இன்பக் கடல் (பாரதிதாசன்) | 1 | 0 |
| கழைக்கூத்தியின் காதல் ,, | 1 | 0 |
| முல்லைக்காடு ,, | 0 | 8 |
| சிறந்த பேச்சாளர்கள் | 1 | 0 |
| பேச்சுக்கலை | 1 | 0 |
| வானொலியிலே | 1 | 0 |
| வீராயி | 1 | 4 |
| தாயும் சேயும் | 0 | 8 |
| கலிங்கத்து இளவரசி | 0 | 8 |
| அந்த இரவு | 0 | 8 |
| காதலர் பாதையில் | 0 | 6 |
| முதலாளி ஒழிக | 0 | 6 |
| முதலாளித்துவம் ஒழிக | 0 | 12 |
| விழாவும் நாமும் | 0 | 6 |
| சித்திரபுத்திரன் எழுதுகிறார் | 0 | 6 |
| புதியதோர் உலகு செய்வோம் | 0 | 6 |
| நரகாசுர படுகொலை | 0 | 12 |
| பிரளய உலகம் | 1 | 0 |
| இதய அலை | 0 | 8 |
| பஞ்சமா பாதகக் கடவுள் | 0 | 4 |
| பரம்பரை வளர்த்த பகை | 0 | 5 |
| பெண்களை நம்பலாமா | 0 | 5 |
| தமிழன் தனிச்சிறப்பு (மறைமலையடிகள்) | 0 | 4 |
| திராவிடம் | 1 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 |
| நாடும் ஏடும் | 0 | 6 |
| சமுதாயப் புரட்சி | 0 | 4 |
| அண்ணா கண்ட தியாகராயர் | 0 | 4 |
| வந்தது வித்து | 0 | 12 |
| போர் முரசு | 0 | 8 |
| தேவலீலைகள் | 0 | 8 |
| நூல் நிலையங்கள் | 0 | 4 |

## பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத்தெரு சென்னை.


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B. A. (Hons.)